අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112784846
isurupaya@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/09/02/13/04/34 ඔබේ යොමුව / உமது இல. / Your Ref. දිනය / திகதி / Date 2019.12.

சுற்றுநிருப இல. 03∴2019

சகல மாகாணக் கல்விச் செயலாளர்களுக்கும்,
சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கும்,
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும்,
சகல கோட்டப் பொறுப்பு பிரதி ∴ உதவிப் பணிப்பாளர்களுக்கும்,
சகல அதிபர்களுக்கும்.

## மாணவர் பாராளுமன்ற வேலைத்திட்டம்

2008 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் வெளியான 2008∴15 ஆம் இலக்கச் சுற்று நிருபம் மற்றும் அறிவுறுத்தற் கோவை மற்றும் 2016 சனவரி மாதம் 22ஆம் திகதி வெளியான 04∴2016 சுற்று நிருபத்தை விஞ்சியதாக இந்த சுற்று நிருபம் மற்றும் அறிவுறுத்தற் கோவையானது தற்போதிலிருந்து நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

தற்போது பாடசாலை மட்டத்தில், வலய மட்டத்தில் மற்றும் மாகாண மட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள மாணவர் பாராளுமன்ற, புதிய சுற்று நிருபம் மற்றும் அறிவுறுத்தற் கோவையின் அடிப்படையில் மறுசீரமைப்பு செய்யப்படுதல் வேண்டும்.

பாடசாலை மாணவ மாணவியருக்கு சனநாயகம், அதன் பொறுப்புக்களும் வகைகூறலும் என்பன பற்றியும் சட்டத்தின் ஆதிபத்தியம், வாக்கு, வாக்களித்தல் ஆகியவற்றின் முக்கியத்துவம் பற்றியும் செய்முறை அறிவைப் பெறுவதற்குரிய வழிகளைத் திறந்து, உரையாடல், இணக்கப்பாடு, ஏனையோரின் கருத்துக்களுக்குச் செவிமடுத்தல் மற்றும் பெரும்பாலோரின் இணக்கப்பாட்டை ஏற்றுக்கொள்ளல் போன்ற திறமைகளையும் மனப்பாங்குகளையும் வழங்கி சனநாயக பெறுமதிகள் மற்றும் பெறுமானங்கள் தொடர்பான அனுபவங்களைப் பெற்று சனநாயக ஆட்சிமுறைமை என்பது வாழ்க்கை முறைமையே என்பதனை அனுபவங்களுடாக தெளிவுபடுத்திக் கொள்வதற்கான சந்தர்ப்பத்தை பெற்றுக் கொடுத்தல் பாடசாலை, வலயம், மாகாணம் மற்றும் தேசிய மட்டத்தில் உருவாக்கப்படும் மாணவர் பாராளுமன்றத்தின் அடிப்படை நோக்கமாகும்.

இப் பாராளுமன்ற வேலைத்திட்டத்தின் வாயிலாக பாடசாலை மாணவர்கள் பல்வேறான அனுபவங்களை பெற்றுக்கொள்வதோடு அவர்கள் பிரதேச மற்றும் தேசிய மட்டத்தில் எதிர்கொள்ளும் சமூக, பொருளாதார பிரச்சினைகளைக் கலந்துரையாடி அதற்கான பல்வேறு தீர்வுகளை முன்வைத்து இணக்கப்பாட்டுக்கு வருவதற்கான சந்தர்ப்பம் உருவாக்கப்படுகின்றது. இனங்காணப்பட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு, பாடசாலை மாணவர் என்றவகையில் ஒற்றுமையாக இணைந்து பல்வேறு வேலைத்திட்டங்களை ஒழுங்கமைத்து நடைமுறைப்படுத்துவதற்கும், அவர்களால் தீர்த்துக்கொள்ள முடியாத பிரச்சினைகள்

தொடர்பாக உரிய அதிகாரிகளின் கவனத்தை ஈர்க்க வைப்பதற்கும் மாணவர் பாராளுமன்றம் சந்தர்ப்பங்களை உருவாக்குகின்றது.

இளம் மாணவர் சமூகம் என்றவகையில் அவர்களது சுய அபிமானம் மற்றும் கௌரவத்தை மதித்து, தேசியத்தைக் கட்டியெழுப்புவதற்கு அவசியமான நேர்மனப்பாங்குகளை உருவாக்கி அதற்குத் தேவையான வழிகாட்டலில் தேசிய ரீதியிலான பங்களிப்பை வழங்குவதற்கு மாணவர்களுக்கு மாணவர் பாராளுமன்ற வேலைத்திட்டம் உதவியாக அமைகின்றது.

அதுபோலவே, பிரதேச மற்றும் தேசிய மட்டங்களில் மாணவர்கள் காணும் பிரச்சிகளை அவை தொடர்பாக தேசிய மட்டத்தில் புத்திஜீவிகள் மற்றும் அதிகாரிகளுடன் திறந்த கலந்துரையாடல்களை மேற்கொள்ளவும் தேசிய, மாகாண மற்றும் பிரதேச மட்ட அபிவிருத்தி வேலைத்திட்ட ஒழுங்கமைப்பு மற்றும் கொள்கை விளக்கம் மேலும் அவ்வாறான வேலைத்திட்டம், கொள்கைத் திட்டமிடல் தொடர்பாக அக்கொள்கையை உருவாக்கியோர் மற்றும் ஒழுங்கமைத்தோர் அனைவருடனும் திறந்த உரையாடலை மேற்கொள்ளவும் மாணவர் பாராளுமன்றம் சந்தர்ப்பம் வழங்குகின்றது.

மாணவர் பாராளுமன்ற வேலைத்திட்டமானது குடியியல் கல்வி விடயப்பரப்பிற்கு இணையாக நடைமுறைப்படுத்தபடும். தேர்தல்கள் ஆணைக்குழு தமது ஐந்தாண்டு உபாயமார்க்க திட்டமிடல் ஊடாக ஜனநாயகம், சர்வஜன வாக்குரிமை மற்றும் அதன் முக்கியத்துவம் தொடர்பில் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்களை தெளிவுபடுத்தும் செயற்பாடும் மாணவர் பாராளுமன்றத்தில் நடைமுறைப்படுத்தப்படும். அதற்கு அவசியமான ஒத்துழைப்பினை தேர்தல் ஆணைக்குழு மற்றும் தேர்தல்கள் திணைக்கள அதிகாரிகளுடாக கிடைக்கப்பெறும்.

மாணவர் பாராளுமன்றங்களைத் தாபித்தல், நடைமுறைப்படுத்தல், வலய மாணவர் பாராளுமன்றத்துக்காக மாணவர் பிரதிநிதிகளைத் தெரிவு செய்தல் ஆகிய பொறுப்புக்கள் வலய மற்றும் கோட்டக் கல்விப் பணிப்பாளர்களின் நேரடி வழிகாட்டலின் கீழ் அதிபர்களைச் சாரும். மாகாண.்.வலய மாணவர் பாராளுமன்றத்தைத் தாபித்தல், நடைமுறைப்படுத்துதல், தேசிய பாராளுமன்றத்துக்கு மாணவர் பிரதிநிதிகளைத் தெரிவு செய்தல் ஆகிய பொறுப்புக்கள் வலயக் கல்விப் பணிப்பாளர்களைச் சாரும். இவ் அனைத்து பணிகளும் மாகாண கல்விப் பணிப்பாளரின் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் கண்காணிப்பின் கீழ் நடைபெறும்.

மாணவர் பாராளுமன்ற வேலைத்திட்டமானது அனைத்து மாணவ மாணவியரதும் ஆசிரியர்களதும் செயற்திறன் மிக்க பங்களிப்புடன் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். பாடசாலை மாணவர் பாராளுமன்றத்தில் மாணவர் அமைச்சிற்கும் அதற்கு இணையாக நடைமுறைப்படுத்தப்படும் வேலைத்திட்டங்களுக்கும் பொறுப்பாக பாடசாலையின் அனைத்து ஆசிரிய குழாத்தினரும் அவர்கள் கற்பிக்கும் விடயப்பரப்பு மற்றும் அனுபவங்களின் அடிப்படையில் பெயர்குறிப்பிடுவது அதிபர்களது பொறுப்பாகும். வலய மற்றும் மாகாண மட்டத்தில் மாணவர் பாராளுமன்றங்களில் அமைச்சுக்கள் மற்றும் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துகையில் அனைத்து விடயப் பணிப்பாளர்களுக்கும் ஆலோசகர்களுக்கும் பொறுப்புக்களை ஒப்படைப்பதற்கு மாகாண.். வலய பணிப்பாளர்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

வலயம் மற்றும் மாகாண மட்டத்தில் மாணவர் பாராளுமன்றங்களை தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்துகின்ற பொறுப்பு மாகாண, வலய கல்விப் பணிப்பாளர்களின் கண்காணிப்பின் கீழ் மாகாண மற்றும் வலய மட்டத்தில் சமூக ஒருங்கிணைப்பு மற்றும் சமாதானக் கல்விப் பாட இணைப்பாளர்களையும் குடியியல் கல்வி விடயப் பொறுப்பு பணிப்பாளர்களையும் சாரும்.

பாடசாலைக் கட்டமைப்பினுள் நடைமுறைப்படுத்தும் பொருட்டு கல்வி அமைச்சு, மாகாண கல்வி அமைச்சு, ஏனைய அரச நிறுவனங்கள் மற்றும் பல்வேறான நிறுவனங்களுடாக

முன்வைக்கப்படும் வேலைத்திட்டங்கள், வேலைத்திட்டத்தின் தன்மையின் அடிப்படையில் உரிய மாணவர் அமைச்சு மற்றும் அம் மாணவ அமைச்சிற்கு இணையான வேலைத்திட்டங்கள் மூலமாக செயற்படுத்தப்பட வேண்டும்.

அரச மற்றும் தனியார் நிறுவனங்களுடாக நடைமுறைப்படுத்தப்படும் பல்வேறான கருத்திட்டங்கள் ∴நிகழ்ச்சித்திட்டங்கள் ∴ சேவைகள் தொடர்பாக பாடசாலை ஆசிரியர்கள், மாணவ மாணவிகளை தெளிவுபடுத்துவதும் பொருத்தமான நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதும் மாணவர் பாராளுமன்றத்தின் அமைச்சிற்குரிய பொறுப்பாகும்.

மாணவர் பாராளுமன்றங்களை பாடசாலைகள், வலய, மாகாண, தேசிய மட்டத்தில் தாபித்தல் தொடர்பான விபரங்கள் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ள ஆலோசனை வழிகாட்டியில் விபரமாக விளக்கப்பட்டுள்ளது. அதனை சிறப்பாக கிரகித்து உரியவாறு மாணவர் பாராளுமன்றங்களை தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறியத்தருகின்றேன்.

விடயப்பரப்பிற்கு இணையானதொரு செயற்பாடாக இந்த மாணவர் பாராளுமன்ற நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டியது அத்தியாவசியமானதோடு அதற்கென முன்னுரிமை வழங்கி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அறியத்தருகின்றேன்.

என்.எச்.எம். சித்ரானந்த
செயலாளர்
கல்வி அமைச்சு

**பிரதிகள்:**

1. ஜனாதிபதியின் செயலாளர், ஜனாதிபதி செயலகம்
2. பிரதமரின் செயலாளர், பிரதமர் செயலகம்
3. தலைவர், தேர்தல் ஆணைக்குழு
4. பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்
5. கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளர் நாயகம், கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
6. பாராளுமன்ற பிரதம ஆணையாளர், பாராளுமன்ற பிரதம ஆணையாளர் அலுவலகம்

## மாணவர் பாராளுமன்ற நிகழ்ச்சித்திட்டத்தை அறிமுகப்படுத்தல்

மாணவர்களுக்கு எதிர்காலப் பிரசை என்றவகையில் மனிதச் சமூகத்தில் பல்வேறு செயற்பாடுகளுக்கு இசைவடையத்தக்க தேர்ச்சியை, கல்வி ஊடாகவே வழங்குதல் வேண்டும். சமூகமயமாதலுடன் தாம் வாழும் பண்பாட்டைப் பற்றுவதற்குத் தேவையான தேர்ச்சிகளையும் அவர்கள் பெற வாய்ப்பு அளித்தல் வேண்டும். மனிதன் தனிமைப்பட்டு வாழ்பவனல்ல. மாறாக குழுவாக, கூட்டாக, அணியாக சகவாழ்வு வாழ்பவன். தாம் வாழும் சமூகத்தினது சமூக அம்சங்களின், பண்பாட்டு விழுமியங்களின் தொகுதிகள் தொடர்பான அனுபவங்களையும் மாணவர்கள் பெறுவது இன்றியமையாதது.

அதனைக் கருதியே ஆட்சி ஒழுங்கமைப்பில் காணப்படும் பல்வேறு வேறுபாடுகள் தொடர்பான விளக்கத்தையும் அனுபவங்களையும் பெறுவதற்கு கல்வியின் ஊடாகவும் வசதி செய்யப்பட்டுள்ளது. அதன் மூலம் அவர்கள் எதிர்கால பிரசைகளாக, தாம் வாழும் சூழல் தொடர்பாகவும், தாம் வாழும் சமூகத்தில் நடைமுறையிலுள்ள பல்வேறு ஆட்சி முறைகள் மற்றும் சமூக முறைமைகள் தொடர்பாகவும் பரந்தளவிலான விளக்கங்களைப் பெறுவதற்கு வாய்ப்புக் கிடைக்கும்.

சனநாயகம் என்பது ஒரு சமூக முறையும் வாழ்க்கை முறையும் ஆட்சிமுறையுமாகும். அச்சனநாயக ஆட்சி முறைக்கு இசைவாகச் செயற்படும் எதிர்காலச் சந்ததியினருக்கு சனநாயக ஆட்சி முறை மற்றும் அதன் பிரயோகங்கள், பெறுமானங்கள் தொடர்பான அனுபவங்களை வழங்குவது அவசியமாகும். சனநாயகம், சனநாயக ஆட்சிமுறையின் பெறுமானங்கள், பிரதிநிதித்துவச் சனநாயகம், அதன் பொறுப்புக்களும் வகைகூறலும், வாக்களித்தல், வாக்களிப்பதன் முக்கியத்துவம், சட்டமும் சட்டத்தின் ஏகாதிபத்தியம் தொடர்பான நடைமுறை அனுபவங்கள் ஆகியவற்றைப் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கும் நோக்குடன் ‘‘மாணவர் பாராளுமன்றம்’’ எனும் வேலைத்திட்டத்தைப் பாடசாலை அமைப்பில் அறிமுகம் செய்வதற்குக் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

மேற்படி மாணவர் பாராளுமன்ற வேலைத்திட்டம் மூலம் மாணவருக்கு சனநாயக நிறுவனங்கள் தொடர்பாகவும், சனநாயகச் சமூகமொன்றில் தேசிய மட்டத்தில் செயற்படும் பாராளுமன்ற முறை, மற்றும் அதன் பாரம்பரியங்கள் தொடர்பாகவும் விளக்கத்தை வழங்க ஆவன செய்யப்படும்.

### மாணவர் பாராளுமன்ற வேலைத்திட்டத்தின் குறிக்கோள்கள்

1. சனநாயகத்தின் அடிப்படை எண்ணக்கருக்கள் மற்றும் அவற்றின் பிரயோகம் தொடர்பான விரிவான விளக்கத்தை வழங்குதல்.

2. தேசிய கல்விப் பொதுக் குறிக்கோள்கள் மற்றும் பொதுத் தேர்ச்சித் தொகுதிகளை அடைவதற்காக செயல்ரீதியான சந்தர்ப்பங்களை உருவாக்குதல்.

3. சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதற்கான தேசிய வேலைத்திட்டமொன்றைக் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் மேன்முறையீட்டு ஆணைக்குழு அறிக்கை பரிந்துரைகளின்படி பாடசாலை மட்டத்தில் நடைமுறைப்படுத்துதல்.

4. வெவ்வேறு மக்களினங்களுக்கும் சமயக் குழுவினருக்கும் இடையே கூட்டுணர்வு, சகவாழ்வு, சகோதரத்துவம், புரிந்துணர்வு ஆகியவற்றை விருத்தி செய்து சமூக ஒருமைப்பாட்டை வளர்ப்பதற்கும் முரண்பாடு தீர்த்தலுக்கும் வழிகோலல்.

5. பிரதேச மற்றும் தேசிய அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு, மாணவரை (யேவழைெ டீரடைனைபெ) தேசத்தைக் கட்டியெழுப்பும் பணிக்காக நேரடியாகத் தொடர்புபடுத்திக் கொள்ளல்.

6. பாடசாலை மாணவரின் தலைமைத்துவத் திறன்களை விருத்தி செய்தல்.

7. குடியியற் கல்விப் பாடத்தின் வழியே கோட்பாட்டு ரீதியிலும் செயன்முறை ரீதியிலும் தேர்ச்சிகளை மேலும் வினைத்திறனுள்ளவாறு செயல் வழியேயும் அடையச் செய்தல்.

***மாணவர் பாராளுமன்றம் என்பது தற்போது நடைமுறையில் உள்ள முறைமையான பாராளுமன்றத்தின் ஒரு பிரதியுரு அல்ல, மாறாக இது மாணவர் பாராளுமன்ற வேலைத்திட்டத்தின் நோக்கங்களை பரந்துபட்ட வகையில் அடைவதற்கும் செயல்ரீதியான அனுபவங்களை வளர்த்துக்கொள்வதற்கும் எடுக்கப்படும் ஒரு முயற்சியாகும்.***

| |
|---|
| பாடசாலை மாணவர் பாராளுமன்றம், வலய மாணவர் பாராளுமன்றம் ஆகியன தொடர்பாக மேற்பார்வை செய்யும் மற்றும் ஆலோசனைகள் வழங்கும் பணி, அந்தந்த வலயத்தில் சமூக ஒருமைப்பாட்டு மற்றும் சமாதானக் கல்விப் பாட இணைப்பு அதிகாரிகள் சமூக விஞ்ஞான ∴ மானுடவியல் பாடப் பணிப்பாளர்கள் மற்றும் ஆசிரிய ஆலோசகர்களைச் சாரும். |

## மாணவர் பாராளுமன்றம்

- மாணவர் பாராளுமன்றம் பின்வருமாறு நான்கு மட்டங்களைக் கொண்டது.
  - ➢ பாடசாலை மட்டத்தில் தாபிக்கப்படும் ''பாடசாலை மாணவர் பாராளுமன்றம்'' (பக்கம் 6)
  - ➢ வலயக் கல்வி மட்டத்தில் தாபிக்கப்படும் ''வலய மாணவர் பாராளுமன்றம்'' (பக்கம் 26)
  - ➢ மாகாண மட்டத்தில் தாபிக்கப்படும் ''மாகாண மாணவர் பாராளுமன்றம்'' (பக்கம் 29)

- தேசிய மட்டத்தில் தாபிக்கப்படும் ''தேசிய மாணவர் பாராளுமன்றம்'' (பக்கம் 31)

## 01. பாடசாலை மாணவர் பாராளுமன்றத்தைத் தாபித்தல்.

1.1 ஒவ்வொரு பாடசாலை மாணவர் பாராளுமன்றமும் குறித்த பாடசாலையின் பெயரினால் அழைக்கப்படும்.. உதாரணம்: ''***அமைதிநேயபுர மகா வித்தியாலய மாணவர் பாராளுமன்றம்***''

நாட்டின் சகல 1 யுடீஇ 1ஊஇ மற்றும் வகை 2 பாடசாலைகளின் 6 – 13 ஆந் தர மாணவர்களில் இருந்து தெரிவு செய்யப்படும் மாணவ பிரதிநிதிகளைக்கொண்டு, பாடசாலை மாணவர் பாராளுமன்றம் தாபிக்கப்படும்.

1.2 பாடசாலை ஆண்டின் முதலாம் தவணைக்குள் பாடசாலை மாணவர் பாராளுமன்றத்தைத் தாபித்து முடித்தல் வேண்டும்.

1.3 பாடசாலை மாணவர் பாராளுமன்ற அமர்வுகள் குறைந்த பட்சம் ஒரு மாதத்தில் ஒரு தடவையேனும் நடாத்தப்படல் வேண்டும்.

1.4 ஒவ்வொரு மாதத்திலும் அமைச்சரவை, பிரதமரின் தலைமையிலும், ஆலோசனைச் செயற்குழு குறித்த அமைச்சரின் தலைமையிலும் கூடுதல் வேண்டும்.

1.5 பாடசாலை மாணவர் பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகம் பதவி பாடசாலை அதிபரைச் சாரும். பிரதிச் செயலாளர் நாயகம் (அபிவிருத்தி) பதவிக்காக, பாடசாலையில் குடியியற்கல்விப் பாடத்திற்குப் பொறுப்பான ஆசிரியரும் பிரதிச் செயலாளர் நாயகம் (நிர்வாகம்) பதவிக்காக, சமூக ஒருமைப்பாட்டு மற்றும் சமாதானக் கல்வி இணைப்பாக்க ஆசிரியரும் அதிபரால் நியமிக்கப்படல் வேண்டும். பிரதிச் செயலாளர் நாயகம் (ஒழுக்கக் கட்டுப்பாடு) பதவிக்குப் பொருத்தமான ஓர் ஆசிரியர் அதிபரால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

1.6 பாடசாலை மாணவர் பாராளுமன்றத்துக்காக பிரதிநிதிகளைத் தெரிவு செய்து நியமிக்கும்போது, அந்தந்தப் பாடசாலையில் 6 – 13 தரங்களைச் சேர்ந்த மாணவர் எண்ணிக்கையை அடிப்படையாகக்கொண்டு அட்டவணை இல. 1 இற்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

| தரம் 6-13 வரையிலான மாணவர் தொகை | தேர்தல் மூலம் தெரிவு செய்துகொள்ள வேண்டிய தொகை | | |
|---|---|---|---|
| | **தரம் 6 - 9** | **தரம் 10 - 13** | **மொத்தம்** |
| **2500 இற்கு மேல்** | **60** | **90** | **150** |
| **1501 - 2500** | **40** | **80** | **120** |
| **501 - 1500** | **30** | **65** | **95** |
| **151 - 500** | **20** | **40** | **60** |
| **150 இற்கு குறைய** | **15** | **30** | **45** |
| | மொத்த மாணவர் தொகை 45 இலும் குறைவான பாடசாலைகளில் உள்ள மாணவர்கள் அனைவரும் பாடசாலை மாணவர் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆவதோடு பிரதான பதவிகளுக்காக வேட்புமனு கோரி, தேர்தல் நடாத்தி அதிகப்படியான வாக்கு பெற்றோரைத் தெரிவு செய்து கொள்ள வேண்டும். | | |

**அட்டவணை இல. 1**

1.7 அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் மாணவர்களின் எண்ணிக்கை இல்லாத பாடசாலைகளில், அந்த மாணவரிடத்தே தெரிவு செய்யப்படுகின்ற விகிதாசாரத்தினை மாற்றிக் கொள்வதற்கு வாய்ப்பு உள்ளது. அதாவது 6 - 9 தெரிவு செய்கின்ற மாணவர் எண்ணிக்கையை 10 - 13 தரங்களிலிருந்தும் 10 - 13 தரங்களிலிருந்து தெரிவு செய்யப்படுகின்ற மாணவர் எண்ணிக்கையை 6 - 9 தரங்களிலிருந்தும் தெரிவு செய்ய முடியும். அவ்வாறு தெரிவு செய்வதற்கும் முடியாதெனில் அந்தந்த ஆண்டுக் குழுக்களில் தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர் விகிதாரசத்தினை கவனத்திற் கொண்டு பொருத்தமான மதிப்பீட்டின் அடிப்படையில் மாணவரது எண்ணிக்கையை தீர்மானிக்கின்ற பொறுப்பு அதிபர் (மாணவர் பாராளுமன்ற செயலாளர் நாயகம்) உட்பட வேட்புமனு குழுவைச் சாரும். அவ்வாறு விகிதாசாரத்தினை தீர்மானிக்கின்ற போது 10 - 13 அல்லது 10 - 11 மாணவர்களுக்கு கூடுதல் வாய்ப்பு கிடைக்கப்பெறும் வகையில் அந்த விகிதாசாரத்தினை தயாரித்துக் கொள்வது மிகவும் அவசியம்.

1.8 இந்த மாணவர் எண்ணிக்கையில் வேட்புமனு கோருகையிலும் தேர்தலில் போட்டியிடுகின்ற போதும் அந்தந்த மாணவர்களது தரக் குழுக்களில் வேறுபாடுகள் காணப்படினும் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்படுகின்ற மொத்த பிரதிநிதிகளது எண்ணிக்கை (அந்தந்த பாடசாலை மாணவர்களது எண்ணிக்கையின் படி) எந்தவகையிலும் மாற்றப்படக் கூடாது.

1.9 மாணவர் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி கிடையாது. ஒட்டுமொத்த பிரதிநிதிகளும் சமமாகப் பகிரப்படும் வகையில் ஒருவருக்கொருவர் முகம் நோக்கியவாறு அமர்வதற்கும் ஏற்றவாறு ஆசனங்களை ஒழுங்கு செய்தல் வேண்டும்.

1.10 இது முற்றுமுழுதாக ஒரு கற்றல் கருமமாதலால், சபை அமர்வுகளின்போது, கல்வித் துறைக்கு அப்பாற்பட்டோரை அதிதிகளாக அழைப்பதைத் தவிர்த்தல் வேண்டும்.

**02. பாடசாலை மாணவர் மன்றத்தின் கட்டமைப்பு**

2.1 நிறைவேற்றுச்சபை - (உப அட்டவணை 03 பார்க்க)

- செயலாளர் நாயகம் (அதிபர்)
- பிரதிச் செயலாளர் நாயகம் (அபிவிருத்தி)
- பிரதிச் செயலாளர் நாயம் (நிர்வாகம்)
- பிரதிச் செயலாளர் நாயகம் (ஒழுக்கம்)

2.2 பாடசாலை மாணவர் பாராளுமன்ற அமைப்பு (உப அட்டவணை 03 பார்க்க)

- சபாநாயகர்
- பிரதமர்
- சபை முதல்வர்
- பிரதிச் சபாநாயகர்
- பிரதிக் குழுக்களின் தலைவர்
- அமைச்சர்கள் 10 பேர்
- பிரதி அமைச்சர்கள் 10 பேர்
- ஆலோசனைக் குழுக்கள் பத்து

## 03. பாடசாலை மாணவர் பாராளுமன்ற மாணவர் அமைச்சுக்கள்

3.01 பாடசாலை மாணவர் பாராளுமன்றத்தின் அமைச்சுக்கள் பத்து ஆகும்.

1. மாணவர் ஒழுக்க மேம்பாடு மற்றும் மாணவர் நலன்புரி அமைச்சு
2. மாணவர் திறன்கள் மற்றும் புத்தாக்க அலுவல்கள் அமைச்சு
3. பாடசாலைகளுக்கிடையே நட்புறவைக் கட்டியெழுப்பும் மற்றும் விருத்தி செய்யும் அமைச்சு
4. கல்வி, மனிதவள அபிவிருத்தி மற்றும் தகவல் தொடர்பாடல் அமைச்சு
5. பண்பாட்டு, சமய அலுவல்கள் மற்றும் விழுமிய மேம்பாட்டு அமைச்சு

6. சமூக நல்லிணக்கம் மற்றும் மாணவர் பாதுகாப்பு நடவடிக்கைகள் அமைச்சு
7. சமுதாயத் தொடர்பு அபிவிருத்தி மற்றும் சமுதாய சேவைகள் அமைச்சு
8. சுகாதாரம், போஷாக்கு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு
9. விவசாய மற்றும் சூழல் அபிவிருத்தி அமைச்சு
10. பௌதிக வள அபிவிருத்தி மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு

3.02 மாணவர் தொகை 45 இலும் குறைவான பாடசாலைகளில் அமைச்சுக்களை ஒன்றிணைத்து, பாடசாலையின் தேவைக்கேற்ப அவற்றை அமைத்துக் கொள்ளலாம்.

3.03 இந்த பத்து மாணவர் அமைச்சிற்கு மேலதிகமாக ஜனநாயகம் மற்றும் நல்லாட்சி அலுவல்கள் அமைச்சு, மாணவர் பாராளுமன்றத்தின் பிரதமருக்கு உத்தியோக''ர்வமாக ஒப்படைக்கப்படும்.

3.04 அந்த அமைச்சுப் பதவிக்கு மேலதிகமாக மாணவர் பாராளுமன்றத்தின் பிரதமர் அப் பாராளுமன்றத்தின் நிதிச் சபையின் செயலாளராகவும் கடமைகளை ஆற்றுவார்.

3.05 பாடசாலை மாணவர் பாராளுமன்ற நிதி நடவடிக்கைகளை கட்டப்படுத்தவென நிதிக்குழுவொன்று அமைக்கப்படும். அந் நிதிக்குழுவானது பின்வரும் பதவிகளைக் கொண்டிருக்கும். நிதிக் குழுவின் தலைவராக மாணவர் பாராளுமன்றத்தின் சபாநாயகர் செயற்படுவதோடு அதன் செயலாளராக பிரதமர் செயற்படுவார். குழுவின் ஏனைய உறுப்பினர்களாக பிரதிச் சபாநாயகர், பிரதிக் குழுக்களின் தலைவர், சபை முதல்வர் ஆகியோர் செயற்படுவர். இந் நிதிக் குழுவின் ஆலோசகராக மாணவர் பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகமாகிய அதிபரால் பெயர் குறிப்பிடப்படும் பாராளுமன்ற பிரதிச் செயலாளர் நாயகம் (நிர்வாகம்) செயற்படுவார்.

## 04. ஆலோசனைச் செயற்குழு

4.1 பத்து அமைச்சுக்களின் பெயரிலேயே 10 ஆலோசனைச் செயற்குழுக்கள் செயற்படும்.

4.2 பாடசாலை மாணவர் பாராளுமன்றத்தில் பதவிகளை வகிக்காத ஏனைய உறுப்பினர்கள் அவர்களது திறமைகளை அடிப்படையாகக் கொண்டு, அந்தந்த ஆலோசனைச் செயற்குழுக்களுக்கு அதிபரை முதன்மையாகக் கொண்ட ஒரு குழுவினாலேயே நியமிக்கப்பட வேண்டும். (7.1.4)

## 05. பாடசாலையின் ஏனைய மாணவர்களின் செயல்ரீதியான பங்களிப்பு

5.1 அமைச்சுக்களின் செயலூக்கமுள்ள செயற்பாட்டுக்காக பாடசாலை மாணவ மாணவியரை அவர்களது விருப்பின் பேரில் அல்லது பாடசாலையின் விருப்பப்படி,

பொருத்தமான முறைகளைக் கையாண்டு, குறித்த பத்து வேலைத்திட்டங்களுக்காகப் பிரித்து வேறாக்குதல் வேண்டும்.

கீழே தரப்பட்டுள்ள அட்டவணை 2 இன் படி, சமமான எண்ணிக்கையாகப் பிரித்தல் பொருத்தமானது. இந்த பத்து வேலைத்திட்டங்களும் குறித்த அமைச்சுக்களின் கீழ் அதே பெயரில் நடைமுறைப்படுத்தப்படும். (வேலைத்திட்டங்கள் நான்கினதும் கட்டமைப்பு உப அட்டவணை 4இல் குறிப்பிடப்பட்டுள்ளது)

5.2 மாணவர் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் பிரேரணைகளையும் மற்றும் அந்தந்த அமைச்சுக்களிடம் ஒப்படைக்கப்படும் பணிகளையும் முறையாகச் செயற்படுத்தும் பொறுப்பு அந்தந்த திட்டங்களுக்குரிய குழுவைச் சாரும்.

5.3 பல்வேறு அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் முறைமையான வகையில் பாடசாலையில் நடைமுறைப்படுத்தவெனப் பிரேரிக்கும் வேலைத்திட்டங்களை, அந்தந்த அமைச்சின் பால் வழிப்படுத்திச் செயலுருப்படுத்த வேண்டும்.

| | **வேலைத்திட்டம்** | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | மாணவர் ஒழுக்க மேம்பாடு மற்றும் மாணவர் நலன்புரி வேலைத்திட்டம் | | | | | | | | |
| 2 | மாணவர் திறன்கள் மற்றும் புத்தாக்க அலுவல்கள் வேலைத்திட்டம் | | | | | | | | |
| 3 | பாடசாலைகளுக்கிடையே நட்புறவைக் கட்டியெழுப்புதல் மற்றும் விருத்தி செய்யும் வேலைத்திட்டம் | | | | | | | | |
| 4 | கல்வி, மனிதவள அபிவிருத்தி மற்றும் தகவல் தொடர்பாடல் வேலைத்திட்டம் | | | | | | | | |
| 5 | பண்பாட்டு, சமய அலுவல்கள் மற்றும் விழுமிய மேம்பாட்டு வேலைத்திட்டம் | | | | | | | | |
| 6 | சமூக நல்லிணக்கம் மற்றும் மாணவர் பாதுகாப்பு நடவடிக்கைகள் வேலைத்திட்டம் | | | | | | | | |
| 7 | சமுதாயத் தொடர்பு அபிவிருத்தி மற்றும் சமுதாய சேவைகள் வேலைத்திட்டம் | | | | | | | | |
| 8 | சுகாதாரம், போஷாக்கு மற்றும் விளையாட்டுத்துறை வேலைத்திட்டம் | | | | | | | | |
| 9 | விவசாய மற்றும் சூழல் அபிவிருத்தி வேலைத்திட்டம் | | | | | | | | |
| 10 | பௌதிக வள அபிவிருத்தி மற்றும் அனர்த்த முகாமைத்துவ வேலைத்திட்டம் | | | | | | | | |

**அட்டவணை இல. 2**

இவ்வொவ்வொரு வேலைத்திட்டத்திற்காகவும் வேலைத்திட்ட வசதிப்படுத்துநர் ஒருவரையும் வேலைத்திட்ட ஒருங்கிணைப்பாளர் ஒருவரையும் மாணவர்களில் இருந்து தெரிவு செய்து நியமித்தல் வேண்டும்.

## 06. பாடசாலையின் சகல ஆசிரியர்களதும் செயல்ரீதியான பங்களிப்பு

6.1 பாடசாலை ஆசிரியர் குழுமத்தின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் தாம் கற்பிக்கும் பாடம், தமது சிறப்பாற்றல்கள், திறன்கள், விசேட துறைகள், பாடசாலையில் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்புக்கள் ஆகியவற்றிற்கு அமைய தமது விருப்பின் பேரில் இவ்வொவ்வொரு அமைச்சுக்களுக்கான வேலைத்திட்டங்களுக்காகப் பிரித்துப் பொறுப்புக்களை ஒப்படைத்தல் வேண்டும்.

6.2 அவ்வாசிரியர் குழுவினர் குறித்த வேலைத்திட்டங்களின் ஆலோசனைக் குழுவாகச் செயற்படுவர். அவர்கள் தமது ஆசிரியர் செயலடைவுப் பத்திரத்தில் இணை விடயப் பரப்பின் கீழ் தமது பங்களிப்பைக் குறிப்பிடுதல் வேண்டும்.

## 7.0 பாடசாலை மாணவர் பாராளுமன்றத்திற்கு மாணவர் பிரதிநிதிகளைத் தெரிவு செய்தல் வேட்பு மனு கோரல்

### 7.1 மாணவர் பிரதிநிதிகளைத் தெரிவு செய்தல்

7.1.1 பாடசாலை மாணவர் பாராளுமன்றத்துக்காக மாணவர் பிரதிநிதிகளைத் தெரிவு செய்து கொள்வதற்காக 6 – 13 ஆந் தர மாணவ மாணவியரிடமிருந்து அட்டவணை 03 இற்கமைய வேட்பு மனு கோரல் வேண்டும். இதன் போது 1.7 மற்றும் 1.8 பந்திகள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்.

சில பாடசாலைகளில் 10-11 அல்லது 10-13 அல்லது தரங்களில் மாணவர் எண்ணிக்கை போதாமையினால் மேற்படி அட்டவணை 01 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மாணவர்களின் வேட்பு மனு பெற்றுக்கொள்ளல் அல்லது மாணவர் பிரதிநிதிகளை தெரிவு செய்தல் தொடர்பாக சிக்கல்கள் தோன்ற இடுமுண்டு.

அவ்வாறான சந்தர்ப்பங்களில் அந்தந்த மாணவர் தொகுதியல் தெரிவு செய்யப்படும் மாணவர் எண்ணிக்கை 10-11 அல்லது 10-13 அல்லது தொகுதிகளிலும் 10-11 அல்லது 10-13 தொகுதிகளிலும் வேட்பு மனு வழங்கி தெரிவு செய்யப்படும் மாணவர் எண்ணிக்கையை 6-9 தொகுதியில் தெரிவு செய்துக் கொள்ளலாம்.

அதுவும் சிக்கலாக அமையுமெனில் அதிபரின் விருப்பு படி அட்டவணை 01 இல் காட்டப்பட்டுள்ள மாணவர் விகிதங்களுக்கு அமைய அந்தந்த தொகுதியில் வேட்பு மனு வழங்கி மற்றும் தேர்மதலுக்கு முன்னிலைப்படுத்துவதற்காக மாணவர் எண்ணிக்கையை தீர்மானிக்க இயலும்

அவ்வாறு மாணவர் விகிதங்களை தயாரிக்கும்போது 10-11 அல்லது 10-13 அல்லது பெரும்பான்மையான மாணவர்களை பிரதிநிதித்துவதற்கு இடமளிக்க்கூடியதாக அந்த விகிதங்களை தீர்மானிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

எவ்வாறாயினும் பாடசாலையில் 6-13 மாணவர் எண்ணிக்கை அடிப்படையில் பாராளுமன்றத்திற்காக தெரிவு செய்யப்படும் முழு மாணவர் பிரதிநிதித்துவ எண்ணிக்கையில் ஒருபோதும் மாற்றங்கள் ஏற்படக் கூடாது.

பாடசாலையில் 6-13 தரங்களின் மாணவர் எண்ணிக்கை இந்த அட்டவணையின் விகிதங்களுக்கு பொருந்தாத சந்தர்ப்பங்களில் மாணவர் பாராளுமன்றத்தின் நிறைவெற்றுக் குழுவின விருப்பிற்கேற்ப மேற்படி விகிதங்களை மாற்றிக்கொள்ளலாம்.

எனினும் தேர்தலின் மூலமாக தெரிவுசெய்யக்கூடிய மொத்த பிரதிநிதிகளின் எண்ணிகைக மாறக்கூடாது. 6-13 அரங்களில் கல்வி பயிலும் எந்தவொரு மாணவருக்கும் வேட்பு மனு வழங்கும் சந்தர்ப்பம் ஏற்படும்.

7.1.2 **வேட்பு மனு கோரல்**

| 6-13 மாணவர் தொகை | வேட்பு மனு கோரவேண்டிய தொகை | | | தேர்தல் மூலம் தெரிவு செய்துகொள்ள வேண்டிய தொகை | | |
|---|---|---|---|---|---|---|
| | 6 - 9 | 10 - 13 | மொத்தம் | 6 - 9 | 10 - 13 | மொத்தம் |
| **2500ற்கு மேல்** | **90** | **135** | **225** | **60** | **90** | **150** |
| **1501 - 2500** | **60** | **120** | **180** | **40** | **80** | **120** |
| **501 - 1500** | **45** | **100** | **145** | **30** | **65** | **95** |
| **151 - 500** | **30** | **60** | **90** | **20** | **40** | **60** |
| **150ற்கு குறைய** | **20** | **40** | **60** | **15** | **30** | **45** |
| மொத்த மாணவர் தொகை 45 இலும் குறைவான பாடசாலைகளில் உள்ள மாணவர்கள் அனைவரும் பாடசாலை மாணவர் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆவதோடு பிரதான பதவிகளுக்காக வேட்புமனு கோரி, தேர்தல் நடாத்தி தெரிவு செய்து கொள்ள வேண்டும். | | | | | | |

அட்டவணை இலக்கம் 03

7.1.2 இந்தக் கையேட்டில் உப அட்டவணை இலக்கம் 01இல் காணப்படுகின்ற மாதிரியை அடிப்படையாகக் கொண்டு சம்பிரதாய தலைமைத்துவத்திற்கு புறம்பாக திறமைகளை வெளிக்காட்டுகின்ற மாணவர்களையும் உள்ளீர்க்கும் வகையிலான பொருத்தமான நியமங்களை உள்ளடக்கியதாக வேட்புமனு பட்டியலினை பாடசாலையின் விருப்பின் பேரில் தயாரித்துக் கொள்ள முடியும்.

7.1.3 அந்த மாதிரிப்படிவம் பாடசாலை விளம்பரப் பலகையில் காட்சிப்படுத்தியதன் பின்னர் வேட்புமனு தாக்கல் செய்வதற்காக முன்வரும் மாணவர்கள் அந்த வேட்புமனு பத்திரத்தை தமது கையெழுத்தினால் பிரதிசெய்து ”ர்த்தி செய்து சமர்ப்பித்தல் வேண்டும்.

7.1.4 தாக்கல் செய்யப்படும் வேட்புமனுப்பத்திரங்களைப் பொறுப்பேற்பதற்காக, ஐந்து பேரடங்கிய வேட்புமனுக் குழுவொன்றினை அதிபர் பின்வருமாறு பெயரிடுதல் வேண்டும்.

- அதிபர் அல்லது சிரேஷ்ட பிரதி அதிபர்
- பிரதி அதிபர் ஒருவர்
- மாணவர் பாராளுமன்ற, பிரதிச் செயலாளர்களாக வரவிருக்கும் மூன்று ஆசிரியர்கள் (இல.1.5 இன் படி)

7.1.5 வேட்புமனுப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியையும் நேரத்தையும் அறிவித்தல் வேண்டும். வேட்பு மனுப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் குறித்த நாளின் குறித்த நேரத்தின் பின்னர் எந்த வேட்புமனுப் பத்திரங்களையும் ஏற்றுக் கொள்ளலாகாது.

7.1.6 இந்த வேட்புமனுப் பத்திரங்களை பரிசீலிக்கும் போது பொதுவான புள்ளிகள் வழங்கும் நடைமுறையொன்று பின்பற்றப்படுதல் வேண்டும். புள்ளிகள் வழங்கும் போது விண்ணப்பபடிவத்தின் வடிவம், முறையான தயாரிப்பு, தெளிவு ஆகிய விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தி புள்ளிகள் வழங்குவது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்.

7.1.7 மாணவர்களது வேட்புமனுக்களுக்கு புள்ளிகள் வழங்கப்பட்ட பிறகு அவற்றை மாணவர்களிடம் மீள ஒப்படைத்து அது தொடர்பில் விளங்கிக் கொள்வதற்கும் வாய்ப்பை பெற்றுக் கொடுத்து புள்ளிகள் குறைவடைவதற்கான காரணங்களை கற்றறிந்து பிறகு வரும் சந்தர்ப்பங்களில் அந்தத் தவறுகளை நிவர்த்தி செய்து கொள்வதற்கு வாய்ப்பை ஏற்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்க.

மாணவர் வேட்பாளர்கள் தாக்கல் செய்த வேட்புமனுக்களை பரிசீலனை செய்து பாடசாலை மாணவர் பாராளுமன்றத்திற்கு உரித்தான வேட்புமனுக்களின் எண்ணிக்கையினை தெரிவு செய்வது வேட்புமனுச் சபையின் கடமையாகும்.

7.18

வேட்பு மனு குழுவினால் தெரிவு செய்யப்படும் தேர்தல் வேட்பாளர்களின் 6-9 ஆவணம் அக வரிசைப்படி தயாரிக்கப்பட்டு 10 வரையில் இலக்கங்களை வழங்க வேண்டியதுடன், 90 இல் இருந்து, 01-13 இல் இருந்து இலக்கங்களை வழங்க வேண்டிய 101 பெயர் பட்டியலை அக வரிசைப்படி தயாரித்து இலக்கங்களை பெற்றுக்கொள்ள தகுதியுடைய அனைத்து வேட்பாளர்கள் தேர்தல் நடவடிக்கைகளின் போது மற்றும் வேறு சந்தர்ப்பங்களின்போது செயற்படும் விதம் மற்றும் பின்பற்றவேண்டிய நெறிமுறைகள் தொடர்பாக நெறிமுறைவிதிகளை தயாரித்து அது குறித்து அனைத்து மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களை அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.

வேட்பு மனுப்பத்திரக் கோரலை அறிவித்து ஒரு வார காலத்தினுள் வேட்பு மனுப் பத்திரங்களை ஏற்றுக்கொள்வதை நிறைவு செய்தல் வேண்டும்.

7.1.9 வேட்புமனுப் பத்திரச் சபையினால் தெரிவு செய்யப்பட்ட, தேர்தல் வேட்பாளர்களின் பெயர்ப்பட்டியலை அகரவரிசைப்படி ஒழுங்குபடுத்தி, இலக்கமிட்டு பாடசாலையில் காட்சிப்படுத்த வேண்டும்.

7.1.10 வேட்புமனுப் பத்திரங்களை ஏற்றுக்கொண்ட பின்னர், இரண்டு வாரங்களுக்குள் பாடசாலைநடைபெறும் ஒரு தினத்தில் தேர்தலை நடாத்த வேண்டும்.

**8. தேர்தல் பிரசார நடவடிக்கைகள்**

8.1.1 பாடசாலையில் சில அறிவித்தல் பலகைகளை அமைத்து, அதில் தம்மைப் பற்றிய சுருக்க விபரங்களை காட்சிப்படுத்துவதற்கு வேட்பாளர்களாகிய மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்க வேண்டும். அவ்விபரங்களைக் காட்சிப்படுத்த முன்னர், அதிபரால் நியமிக்கப்படும் பிரதிநிதி ஒருவரிடம் அவற்றைக் காட்டி, அனுமதியைப் பெற்றுக் கொள்வது அவசியமாகும்.

8.1.2 வாக்குக் கோருவதற்கான விளம்பர உத்திகளாக, சுவரொட்டிகளைக் காட்சிப்படுத்தல், துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தல் போன்ற உத்திகள் பாடசாலை வளாகத்தில் மட்டுமே கையாள வேண்டுமென்பதுடன் எவ்வகையிலும் அவை அச்சிடப்படாதவையாக இருத்தல் வேண்டும். அவ்விபரங்களைக் காட்சிப்படுத்த முன்னர், அதிபரினால் அல்லது அதிபரால் நியமிக்கப்படும் பிரதி செயலாளர் நயகத்திடம் அனுமதியைப் பெற்றுக் கொள்வது அவசியமாகும். சுற்று நிறுபத்திற்கு முரணான அல்லது கட்டுக்கடங்காத வகையில் செயற்படும் ஒவ்வெறு சந்நர்ப்பங்ளின் போதும் மாணவர் பாராளுமன்ற பிரதி செயலாளர் நயகம் (ஒழுக்கம்) தலைமையில் ஒழுக்காற்று குழுவினை முகங்கொடுப்பதற்கு தேவையான நடவடிக்கையினை மேற்கொள்வதற்கான பொறுப்பு மாணவர் பாராளுமன்ற செயலாளர் நயகத்தினை சாறும். இறுதியாக வேட்புமனுவினை இரத்து செய்யக்கூடிய நடவடிக்கையினை மேற்கொள்ளலாம்.

8.1.3 .

மாணவர் பாராளுமன்றித்தின் அனைத்து நடவடிக்மகைகளும் பாடசாலையின் பொது சட்டதிட்டங்கள் மற்றும் சம்பிரதாயங்களுக்கு உட்படுவதோடு பாராளுமன்றத்தின் அனைத்து நடவடிக்கைகளும் மிக ஒழுக்கமான முறையில் மற்றும் பண்புடன் பேணுவது தொடர்பாக தேவையான சட்ட விதிமுறைகள் மாணவர் பாராளுமன்ற செயற்பாடுகளுடன் இணைந்து நன்நடத்தை நெறிமுறைகளின் கீழ் பராமரிக்கப்படும் பொறுப்பு அதிபர் முதற்காண்டு றசைவேற்றுக்குழுவிடம் ஒப்படைக்கப்படும்.

## 9. வேட்புமனுப்பத்திரங்களினை பெறுப்பளித்தளின் பின் மாணவர் பாராளுமன்ற வாக்கெடுப்பு நடத்துதல்

9.1 வேட்புமனுப் பத்திரங்களை ஒப்படைத்த பின்னர், பாடசாலையில் மாணவர் பாராளுமன்றத்துக்காக வாக்குகள் கோரும் சகல அபேட்சகர்களும் காலைக் கூட்டத்தில் அல்லது ஊடக அலகைப் பயன்படுத்தி தம்மை அறிமுகஞ் செய்து, மாணவர்களை விளிக்கச் சந்தர்ப்பம் அளிக்கலாம். இதற்காக முறையான ஒரு வேலைத்திட்டத்தை அதிபரின் விருப்பின் படி தயாரித்துக் கொள்ளலாம்.

9.2 தேர்தல் பிரச்சாரங்களின்போது போஸ்ட்டர், துண்டு பிரசுரங்கள் போன்றவை அச்சிடுவது அல்லது அச்சிட்டு பகிர்ந்தளிப்பது முற்றிலும் தடைசெய்யப்பட்டுள்ளதுடன், பரிசுகளை வழங்குதல், வாக்குறுதி வழங்கலை மேற்கொளக்கூடாதென்பதுடன், அவ்வாறான செயல்களில் ஈடுபடுவது 8.1.2. வாசகத்திற்கமைவாக வேட்புமனு நிறுத்தப்படுவது வரையிலான தண்டனைக்குரிய குற்றமாகும்

9.3 தமது புகைப்படத்தை காட்ச்சிப்படுத்தும் சந்தரப்பங்களுடன் கூடிய மாணவ பிரதிநிதிகள் தமது புகைப்படத்தை பாடசாலை படைப்பாற்றல் திறண் கொண்ட மாணவர்கள் மூலமாக வடிவமைக்கப்பட்டு காட்ச்சிப்படுத்த முடியும். அந்த படைப்புகளை பாடசாலைக்கு வெளியே தனிப்பட்ட நபர்களைக் கொண்டு படைப்பதை முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டும். வாக்குகளைக் கோரி பகிர்ந்தளிக்கப்படும் துண்டு பிரசுரங்கள் தமது கையால் எழுதப்பட்ட பிரசுரங்களாக இருப்பதுடன் அவை எந்தவிதத்திலும் அச்சிடப்பட்வையாக இருத்தல் கூடாது.

9.4. தேர்தல் அறிவிக்கப்பட்டதுடன் மாணவர் பிரதிநிதிகள் தொடர்பாக பாடசாலைக்கு உரித்தான நெறிமுறையொன்றினை தயாரித்துக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

## 10 வாக்கெடுப்பு நடத்துதல்

10.1 தேர்தல் பற்றிய அறிவிப்புச் செய்த தினத்திலிருந்து அதிபரே உத்தியோக''ர்வமாக தேர்தல் ஆணையாளர் ஆவார். ஆசிரியர் குழாத்திலிருந்து தேர்தல் பணியாளர்களை நியமித்துக் கொள்வது அதிபரின் பொறுப்பாகும்.

10.2 மாணவர் பாராளுமன்றத் தேர்தல் நடவடிக்கைகளுக்காக தேர்தல் ஆனைக்குழுவின் மற்றும் தேர்தல் ஆனைக்குழுவின் உதவியினை பெற்றுக்கொள்ள முடியும். அதற்காக பாடசலை அமைந்துள்ள மாவட்டத்தின் பிரதி.'.உதவி தேர்தல் ஆனையாளரினை தொடர்பு கொண்டு தேவையான உதவிகளினை இலகுவாக பெற்றுக்கொள்ள முடியும்.

10.3 இலங்கையின் பொதுவான தேர்தல் பாரம்பரியத்தின் படி பாடசாலையில் பொதுவான ஓர் இடத்தில் அல்லது சில இடங்களில் தேர்தலை நடாத்த வேண்டும்.

10.4 **அ.** வாக்களிப்பதற்காக ஒன்றையொன்று ஒத்த வாக்குச் சீட்டுக்களையே வாக்காளர் மாணவ மாணவியருக்கு வழங்க வேண்டும்.

**ஆ.** அவ்வாக்குச் சீட்டினை ஏற்றுக்கொள்ளப்பட்டதாக மாற்றுவதற்கு அவ்வாக்குச் சீட்டின் இடது புறத்தே அதிபரின் பதவி முத்திரையுடன் அதிபரின் அல்லது அவரால் அனுமதி அளிக்கப்பட்ட ஓர் ஆசிரியரின் கையொப்பமும் இடப்பட்டிருத்தல் வேண்டும். மற்றைய பக்கத்தில் வாக்காளர் மாணவ மாணவியர்களான தரம் 6 மற்றும் அதன் மேல் வகுப்பு மாணவ மாணவிகளுக்கு வாக்களிப்பதற்காக பாவிக்கப்படுதல் வேண்டும்.

**இ.** வாக்களிக்கும் இடத்தில் வேட்பாளர்களின் பெயரையும் அவர்களுக்கு உரிய இலக்கங்களையும் காட்சிப்படுத்துதல் வேண்டும்.

10.5 . மாணவர் பாராளுமன்ற செயலாளர் நாயகமாக அதிபர் அல்லது அவால் அதிகாரம் வழங்கப்படும் பிரதிநிதி ஒருவரின் ஒப்பம் மற்றம் பதவிமுத்திரை இல்லாவிடின் அது உத்தியோகபுர்வ வாக்காளர் அட்டையாக கணிக்கப்பட மாட்டாது

10.6 பாடசாலையில் தரம் 6 க்கு மேற்பட்ட (தரம் 6 உள்ளடங்களாக) அனைத்து மாணவர்களும் வாக்களிப்பதற்கு தகுதிபெறுவதோடு ஒருவருக்கு இரண்டு வாக்குகள் உரித்தாகும்.

(அ) இந்த இரண்டு விருப்புகளில ஒன்று 6-9 தரங்களில் தேர்தலை கோரும் விணிணப்பதாரருக்கும், அடுத்த விருப்பை 10-13 அல்லது 10-13 தரத்தொகுதிகளில் மேதர்தலை கோரும் விணிணப்பதாரர் ஒருவருக்கு வழங்க வேண்டும்.

(ஆ)இந்த இரண்டு விருப்புகளும் ஒரே தரத்தொகுதிக்கு (6-9 அல்லது 10,11,13) வேட்பாளருக்க வழங்கப்பட்டிருப்பின் அந்த வாக்கு ரத்துச்செய்யப்பட்ட வாக்காக கருதப்படும்.

## 11. வாக்களித்தல்

11.2 பாடசாலையில் 6-13 தரங்களில் அனைத்து மாணவர்களுக்கும் வாக்களிக்கும் உரிமையுண்டு .

11.2. ஒரு மாணவருக்கு இரண்டு விருப்புகள் உரித்தாகும்

11.3 வாக்கு செல்லபடியாவது தொடர்பில் இரண்டு விருப்பு வாக்குகளும் பயன்படுத்த வேண்டியதுடன் அந்த இரண்டு விருப்பு வாக்குகளும் 6-9 தரங்கள் மற்றும் 10-13 தரங்கள் இரண்டு தொகுதிகளில் இரு வேட்காளர்களுக்கு வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

11.4 ஒரே தொகுதிக்கு இரண்டு விருப்புகளை வழங்குதல் அல்லது ஒரு விருப்பபை மாத்திரம் வழங்குவது ரத்துச்செய்யலுக்கு உள்ளாகும்.

## 12 வாக்குகளை எண்ணுதலும் மாணவர் பிரதிநிதிகளைத் தெரிவு செய்தலும்

12.1 வாக்குகளை எண்ணுவதற்காக, பொதுவாக தேர்தலில் வாக்குகளை எண்ணும் முறையைப் பின்பற்றுதல் வேண்டும்.

12.2 வாக்குகளை எண்ணும்போது அந்தந்த வேட்பாளர் பெற்ற வாக்குகளைக் குறித்துக்கொள்வதற்காக 6 – 9 ஆந் தர வேட்பாளர்களுக்காக தனியானதொரு பொழிப்புத் தாளையும் 10 – 13 ஆந் தர வேட்பாளர்களுக்காக தனியானதொரு பொழிப்புத் தாளையும் தயாரித்துக்கொள்ள வேண்டும்.

12.3 வாக்குகளை எண்ணிய பின பாடசாலையில் 6-13 அல்லது 6-11, 6-13 அல்லது மாணவர் எண்ணிக்கையின் அடிப்படையில் அட்டவணை 1 க்க அமைவாக அந்தந்த தர தொகுதிகளின் படி மாணவர் பிரதிநிதிகளை தெரிவு செய்து நியமிக்க வேண்டும். தெரிவல் நியமிக்கப்படாத மாணவர் வேட்பாளர்களைின் பெயர் பட்டியல், பெற்றுக்கொள்ளப்பட்ட வாக்கு எண்ணிக்களுக்கமைவாக வரிசைப்படி தயாரித்து தேவையான சந்தர்ப்பங்களில் பாவனைக்குட்படுத்துவதற்காக பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும்.

12.4 வாக்களிப்பு முடிவடைந்து இறுதி முடிவ தொடர்பான அறிக்கையினை அதிபருக்கு கிடைத்தவுடன் அவரால் மாணவர் பாராளுமன்றத்திற்கு தெரிவாகும் பிரதிநிதிகளின் பெயர்களை வெளியிட்டு காட்ச்சிப்படுத்த வேண்டும்.

12.5 வாக்களிப்பு முடிவடைந்து முடிவுகளை வெளியிட்ட பின்னர், முதலாவது (கன்னி) அமர்வுக்காக நாள் குறிக்கும் பொறுப்பு அதிபரைச் சாரும். பின்னர், அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் பதவிகளுக்காக எதிர்பார்க்கும் பிரதிநிதிகளிடமிருந்து விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ள ஆவன செய்தல் வேண்டும்.

12.6 அந்த விண்ணப்பங்கள் தொடர்பில் திறமை அடிப்படையில் புள்ளி வழங்கப்பட்டு அந்தந்த அமைச்சுப் பதவிக்காக விண்ணப்பித்துள்ள பிரதிநிதிகள் பெற்ற புள்ளிகளின்

இறங்குவரிசைப்படி, பிரதிநிதிகளின் பெயர்ப் பட்டியலை முதலாவது பாராளுமன்ற அமர்விற்கு முன்னர் தயாரித்துக் கொள்ளல் வேண்டும்.

13 **பிரதான பதவி, ஏயை பதவிகள் மற்றும் குழு தொடரடபான உறுப்பினர்களை நியமித்தல்**

13.1 பாராளுமன்றத்துக்குப் பிரதான பதவிகளுக்குப் பொருத்தமான பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் சந்தர்ப்பம், மாணவர் பாராளுமன்றத்துக்குத் தெரிவாகிய பிரதிநிதிகளுக்கு உரித்தாகும்.

13.2 அப்பதவிகளின் கடமைகள், பொறுப்புக்கள் பற்றிய பூரணமான அறிவூட்டல் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தினால் செய்யப்பட வேண்டும்.

13.3 அநத அறிவுறுத்தலுக்குப் பின்னர் முதலாவது பாராளுமன்ற அமர்வுக்கு முன்னர் செயலமர்வு ஒன்றை நடத்தி பொருத்தமானவர்களைப் பெயரிட்டுக் கொள்வதற்கு மாணவர் பிரதிநிதிகளுக்கு கட்டாயமாக சந்தர்ப்பம் வழங்க வேண்டும்

.

13.4 பிரதி சபாநாயகர், பிரதமர், சபைத்தலைவர், பிரதி செயற்குழு தலைவர் போன்ற முக்கிய நான்க பதவிகளும் மாணவர் பிரதிநிதிகளின் முன்அமாழிவு வழிமொழிவுடன் தெரிவுசெய்து நியமிக்க வேண்டும்..

**14 மாணவர் பாராளுமன்றத்தின் பிரநிதி பதவிக்கான வெற்றிடம்**

14.1 மாணவர் பிரதிநிதி பாடசாலை கல்வியில் நிறைவு பெறுதல், பாடசாலையை விட்டுச் செல்தல், வேறு பாடசாலையில் சேர்தல், மூன்று மாதத்திற்கு மேலாக வெளிநாட்டில் இருத்தல், பாராளுமன்ற நெறமுறைகளுக்கு முரணாக செயற்படுதல் அல்லது பாராளுமன்ற செயலாளர் நாயகம், பிரதி செயலாளர் நாயகமார்கள் தீர்மானிக்கும் ஒழுக்கத்திற்கு மாறாக செயல்புரிதல் போன்ற காரணங்களினால் மாணவர் பாராளுமன்றத்தில் அகற்ற முடியும்-

14.2 வெற்றிடமாகக் காணப்படும் மாணவர் பிரதிநிதி பதவியை நிரப்புதல்

மாணவர் பாராளுமன்றத்தின் தேர்தலை நடாத்தும்போது குறிப்பிட்ட மாணவர் எண்ணிக்கையை தெரிவு செய்து தேர்தலுக்கு முன்வந்த ஏனைய மாணவர்

வேட்பாளர்கள் பெற்றுக்கொண்ட வாக்கு எண்ணிக்கையின் அடிப்படையில் வரசைப்படி தயாரிக்கப்பட்ட ஆவணத்தில் வெற்றிடமாகக் காணப்படும் பதவிகளுக்காக பிரதிநிதிகளை முன்னுரிமை வரிசை அடிப்படையில் நியமித்தல் வேண்டும்

**15 .முக்கிய பதவிகள் தொடர்பாக பிரதிநிதிகளை தெரிவுசெய்தல்**

.15.1 முக்கிய பதவிகள் தொடர்பாக பொருத்தமான மாணவர் பிரதிநிதிகள், மாணவர் பிரதிநிதிகளின் முன்மொழிவு வழிமொழிவின் படி தெரிவு செய்து நியமிக்க வேண்டும்.

15.2 இந்த வாய்ப்பினை மாணவர் பாராளுமன்ற பிரதிநிதிகளுக்கு முதல் அமர்வில் வழங்கப்படல் வேண்டும்.

.15.3 ஏதேனும் ஒரு பதவிக்கு ஒருவருக்கு மேல் முன்மொழிவு வழிமொழிவு இடம்பெறும்போது ரகசிய தேர்தல் ஒன்று நடாத்தப்பட்டு ஒருவரை தெரிவு செய்ய வேண்டும்.

**. 16 மாணவர் உறுப்பினர்களுக்கு ஆசனங்களை ஒதுக்குதல்**

16.1 மாணவர் பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வின்போது சகல உறுபபினர்களுக்கும் ஆசனங்களை ஒதுக்கி வழங்கும்வரை சபை வல்லையில் எந்தவொரு ஆசனத்திலும் மாணவர் பாராளுமன்ற உறுப்பினர் அமரலாம்

16.2 சபாநாயகரினால் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஆசனம் ஒதுக்கிதரப்படல் வேண்டும்.

16.3 மாணவர் படிராளுமன்றத்தில் எதிர் கட்சி இல்லாததுடன் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒவ்வொரு உறுப்பினரும் சமமாக பிரிக்கும் வகையில் ஒருவருக்கொருவர் முகம் கொடுத்து அமரும் வகையில் இருக்கைகள் ஏற்பாடு செய்யப்படல் வேண்டும்.

16.4 வெற்றிபெற்ற வேட்பாளர்கள் ஆண் பெண் என, தரமட்டத்தில் பிரிக்கப்பட்டு ஏறுவரிசையில் வெவ்வேறாக வைத்து ஒன்று இரண்டு என எண்ணப்பட்டு ஒன்று கிடைக்கப்பெற்ற பிரதிநிதிகள் ஒரு பக்கமாகவும் இரண்டு கிடைக்கப்பெற்ற பிரதிநிதிகள் இரண்டாவது பக்கத்திலும் அமரச் செய்யலாம்..

**18. முதலாவது அமர்வும் மற்றும் சத்தியப் பிரமாணம் செய்தல்**

18.1. பிரதான பதவிகளுக்குப் பொருத்தமான பிரதிநிதிகளை முன்மொழிவு - வழிமொழிவு மூலம் நியமித்துக்கொள்ளும் சந்தர்ப்பத்தை மாணவர் பிரதிநிதிகளுக்கு முதலாவது பாராளுமன்ற அமர்வின்போது வழங்குதல் வேண்டும். யாதேனும் பதவிக்கு ஒருவருக்கு மேற்பட்டவர்களது பெயர்கள் பிரேரிக்கப்பட்டு வழிமொழியப்படுமாயின் இரகசிய வாக்கெடுப்பு நடத்தி, அவர்களுள் ஒருவரைத் தெரிவு செய்து கொள்ளல் வேண்டும்

18.2. முதன்முதலாக சபாநாயகர் ஒருவரைத் தெரிவு செய்தல் வேண்டும். அவர் பாராளுமன்றப் பொதுச் செயலாளர் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்தல் வேண்டும்.

.18.3 சபாநாயகர் முன்னிலையில் ஏனைய உறுப்பினர்கள் சத்தியப் பிரமாணம் செய்து கொள்ளல் வேண்டும்.

.18.4 மற்றைய நான்கு பிரதான பதவிகளுக்குத் தெரிவாகும் பிரதிநிதிகள் அதன் பின்னர் சத்தியப் பிரமாணம் செய்தல் வேண்டும்.

18.5 . அமைச்சுப் பதவிகளுக்காக விண்ணப்பித்த பிரநிதிகள் பெற்ற புள்ளிகளின்படி, தயாரித்த பட்டியலில் இருந்து மேற்படி பிரதான பதவிகளைப் பெற்ற மாணவர்கள் உள்ளனராயின், அவர்களது பெயர்களை அப்பட்டியலில் இருந்து நீக்கி, அப்பட்டியலில் மிகக் கூடுதலான புள்ளிகளைப் பெற்றவரை அமைச்சராகவும் அதற்கு அடுத்ததாக உயர் புள்ளிகள் பெற்றவரைப் பிரதி அமைச்சராகவும் அறிவித்தல் வேண்டும்.

18.6 .தெரிவாகிய அமைச்சர்களதும் பிரதி அமைச்சர்களதும் சத்தியப் பிரமாணம், பாடசாலைப் பிரதான கூட்டமொன்றின்போது பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் முன்னிலையில் இடம்பெறுதல் வேண்டும்.

## 19 அமர்வுகள் நடத்துதலும் பாராளுமன்றத்தை நடத்திச் செல்லுதலும்

19.1 மாதத்திற்கு ஒரு தடவை பாராளுமன்ற அமர்வுகளை நடத்துதல் வேண்டும். அவ்வாறு நடத்த முடியாத சந்தர்ப்பங்களில் தவணைக்கு ஒரு அமர்வு வீதமேனும் நடத்துதல் வேண்டும்.

19.2 அமர்வுக்குரிய நிறைவெண் மாணவர் பிரதிநிதிகளுள் மூன்றில் இரண்டு பகுதியினராவர்.

19.3. பாராளுமன்ற அமர்வுக்குரிய நிகழ்ச்சி நிரல், பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் ஆலோசனைப்படி, பிரதிச் செயலாளர் நாயகத்தினால் (அபிவிருத்தி) மேற்கொள்ளப்பட

வேண்டும். அப்போது அது வரையில் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைகளைக் கவனத்திற்கொண்டு செயற்படுதல் வேண்டும்.

19.4. பாடசாலையின் எந்தவொரு மாணவனும் மாணவியும் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு ஊடாக, மாணவர் பாராளுமன்றத்தில் கலந்துரையாடிச் செயலுருப்படுத்தத் தக்க பிரேரணைகளை எழுத்து மூலம் செயலாளர் நாயகத்துக்கு சமர்ப்பிக்கலாம்.

19.5. நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்படும் பிரேரணைகளைப் பாராளுமன்றத்தில் முன்வைக்கும் சந்தர்ப்பமும் அதே பாராளுமன்ற உறுப்பினருக்கு வழங்கப்படல் வேண்டும்.

19.6 அவ்வாறு முன்வைக்கப்படும் முன்மொழிவுகளை கருத்திற் கொண்டு குறிப்பிட்ட அமர்வின்போது கலந்துரையாடலுக்கு எடுக்கப்படும் முன்மொழிவுகள் மாணவர் பாராளுமன்ற நிறைவேற்றுக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டு குறிப்பிட்ட முன்மொழிவோ அல்லது அந்த முன்மொழிவுகள் தொடர்பாக கலந்துரையாடும் திகதி மற்றும் நேரம், முன்மொழிவினை முன்வைக்கும் பேச்சாளருக்கு வழங்கப்படும் காலம் மற்றும் நேரம், அது குறித்தி கருத்து தெரிவிப்பதற்கு முன்வரும் ஏனைய பேச்சாளர்கள் எண்ணிக்கை மற்றும் அவர்களுக்கு வழங்கப்படும் காலம் தீர்மானிக்கப்பட்டு அந்த தலைப்பு அல்லது பல தலைப்புக்கள் தொடர்பாக தெரிவு செய்யும் சந்தர்ப்பம் சபாநாயகர் மாணவருக்கு ஒப்படைக்கபடல் வேண்டும்.

.19.7 சபாநாயகர் மாணவர் பாராளுமன்றத்தில் அர்ந்திருக்கும் இரு பக்கமும் சமமாகும் விதத்தல் அந்தந்த பிரேரணைக்கு பேச்சாளர்களை பெயரிட்டு உரிய ஒவ்வொரு பிரேரணையின் கீழ் கருத்துக்களை முன்வைக்கும் மாணவர் பிரதிநிதிகளின் ஆவணம் மாணவர் பாராளுமன்றத்தில் செயலாளர் நாயகம் உள்ளிட்ட நிறைவேற்றுக் குழுவிற்கு வழங்கி அனுமதியினை பெற வேண்டும்.

19.8. சபை அமர்வின்போது முன்வைக்கப்படும் பிரேரணைகளை விவாதத்திற்கு உட்படுத்தி, திருத்தங்கள் இருப்பின் அவற்றையும் உள்ளடக்கி, நிறைவேற்றப்படும் தீர்மானங்களை செயலுருப்படுத்துவதற்காகக் குறித்த விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சருக்குச் சந்தர்ப்பம் அளித்தல் வேண்டும்.

19.9. அப்பிரேரணையைக், குறித்த அமைச்சின் அமைச்சர், ஆலோசனைக் குழுவினர், வேலைத்திட்டத்தின் உறுப்பினர்கள் ஆகியோரின் பங்குபற்றலுடன் செயற்படுத்தல் திட்டமொன்றினை உள்ளடக்கி, வேலைத்திட்டத்தைத் தயாரித்துப் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்திடம் சமர்ப்பித்து, அனுமதியைப் பெற்ற பின்னர் நடைமுறைப்படுத்த வேண்டும்.

19.10 பாடசாலை விடயப்பரப்புடன் தொடர்புபடுத்தி, மேலும் வினைத்திறனான ஒரு கற்றல் கருமமாகக் கருதிப், பாடசாலை மாணவர் பாராளுமன்றத்தினை நேர்த்தியாகவும்

ஒழுக்கம் மிக்கதாகவும் நடத்திச் செல்வது செயலாளர் நாயகத்தினதும் பிரதிச் செயலாளர் நாயகத்தினதும் பொறுப்பாகும்.

19.11 பாடசாலை மாணவர் பாராளுமன்றத்தை ஒழுக்கம் மிக்கதாக நடத்திச் செல்வதற்காக, பிரதிநிதிகளுக்கு விசேட பயிற்சியையும் அனுபவங்களையும் வழங்கி ஆக்கபூர்வமான டவடிக்கை மேற்கொள்ள வேண்டுமஅணுகுமுறைகளை ஏற்படுத்தல் வேண்டும்.

19.12. இந்த பாடசாலை மாணவர் பாராளுமன்ற வேலைத்திட்டத்தைப் பாடசாலையினதும் மாணவரதும் ஒட்டுமொத்த அபிவிருத்திக்காக நேர்மனப்பாங்குடன் சாத்தியமான முறையில் பயன்படுத்த முனைதல் வேண்டும்.

19.13 வலய மாணவர் பாராளுமன்றம் தொடர்பாக பிரதிநிதிகளை நியமிக்கும்போது மாணவர் பாராளுமன்றத்தின் பிரதிநிதிகளிடம் வேட்பு மனு கோரப்பட்டு தேர்தல் ஒன்றை நடாத்தி அதிக கூடுதலான வாக்கைப் பெறும் இரண்டு மாணவர் பிரதிநிதிகளை தெரிவு செய்து நியமித்து அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். கலப்பு பாடசாலையெனில் ஆகக் கூடிய வாக்குகளைப் பெற்ற மாணவர் அல்லது மாணவிளை தெரிபுவு செய்து அனுப்புவதற்க நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

## 20 மாணவர்பாராளுமன்றத்தில் விவாதங்களுக்கு உள்ளாகும் பிரச்சினைகள்

20.1 முக்கியமாகக் கருதப்படும் ஏதேனும் ஒரு பிரச்சினை தொடர்பாக எந்தவொரு உறுப்பினருக்கும் பிரேரணை ஒன்றை முன்வைக்கும் அதிகாரம் உண்டு அவ்வாறான பிரேரணையை முன்வைக்கும் முன் மாணவர் பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகத்திற்க முன்னிலைப்படுத்தி அவரின் பரிந்துரையை பெற்றுக்கொள்வது அவசியமாகும்

20.2 பரிந்துரை பெற்றுக்கொண்ட பின்னர் முன்வைக்கப்படும் அந்த பிரேரணை விவாததிற்கு எடுக்கப்பட வேண்டியதுடன், மாணவர் பிரதிநிதிகளினால் முன்வைக்கப்படுகின்ற பிரேரணைகளை மேம்படுத்தி விவாதத்தில் கலந்துகொள்ளம் பிரைதிநிதிகளின் கருத்துக்கள் முன்வைக்கப்படல் வேண்டும். ஒரு மாணவர் பிரதிநறிதியால் முன்வைக்கப்படும் கருத்தானது மேம்படுதடதப்பட்டு விவாதத்திற்கு உள்ளாகும் விடயங்கள் குறித்து பாடசாலை மாணவர்கள் என்ற ரீதியில் அவர்களுக்கு கூட்டாக ஒன்ற சேர்ந்து நிறைவேற்றக்கூடிய பொறுப்பு தொடர்பாக நன்கு கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

20.3 விவாதத்திற்கு உள்ளாக்கப்படும் எந்தவொரு பிரேரணையும் திருத்தங்களுடன் நிறைவேற்றிக் கொள்ளும் பொறுப்பு பாடசாலை மாணவர் பாராளுமனறத்திடம் ஒப்படைக்கப்படுவதோடு அவ்வாறு நிறைவேற்றிக் கொள்ளப்பட்ட பிரேரணைகளுக்கிடையில் பாடசாலை மாணவர்கள் ஒன்றுசேர்ந்து நடவடிக்கை மேற்கொள்ளக்கூடிய செயற்பாடுகள் என்றால் அவற்றை நிறைவேற்றிக் கொள்வதற்காக உரிய பிரிவுகளுக்க முன்னிலைப்படுத்துவது மாணவர் பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகத்தின் பொறுப்பாகும்

20.4 பாடசாலை மாணவர் பாராளுமன்றத்தில் அமுல்படுத்துவதற்காக முன் மொழியப்பட்டு நிறைவேற்றப்படும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தப்படும் போது அந்தந்த மாணவர் பாராளுமன்றங்களில் நிறைவேற்றப்படும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கமைவாக அந்தந்த பாராளுமன்ற செயலாளர் நாயகமார்கள் பின்வரும் நடைமுறைகளை பின்பற்ற வேண்டும்.

20.5 அ) பாடசாலை மாணவர் பாராளுமன்றத்தில் மாணவர்கள் ஒன்றுகூடி நடைமுறைப்படுத்தக்கூடிய முன்மொழிவொன்று நிறைவேற்றப்பட்டால் அந்த முன்மொழிவினை நடைமுறைப் படுத்துவதற்கு மாணவர் அமைச்சுக்கு இணைவாக அமுல்படுத்தப்படும் உரிய நிகழ்ச்சத்திட்டம் ஒப்படைக்கப்படல் வேண்டும். அந்த நிகழ்ச்சித்திட்டத்தினால் நிறைவேற்றப்பட்ட முன்மொழிவினை அமுல்படுத்தி அதன் முன்னேற்றத்தை அதிபர் ஊடாக மாணவர் பாராளுமன்ற செயலாளர் நாயகத்திற்க முன்னிலைப்படுத்தப்படல் வேண்டும்.

(ஆ) அந்த முன்னேற்ற அறிக்கையை மாணவர் பாராளுமன்றத்திற்க சமர்ப்பித்தப் பின்னர் பாராளுமன்றத்தில் ஏனைய மாணவர் பிரதிநிதிகளுக்கு அந்த செயற்பாடு குறித்து மீளாய்வு செய்து விவாதம் செய்வதற்கு சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும்.

## 21. சபாநாயகரின் செயற்பாடு

21.1.2 மாணவர் பாராளுமன்றங்களில் செயலாளர் நாயகத்தின் ஆலோசனையின் பேரில் பேணுதல், மாணவர் பாராளுமன்றத்தின் சட்டவிதிகளை நிறைவேற்றுவதற்கான தேர்தலை நடத்தவேண்டிய சந்தர்ப்பங்களில் தேர்தலை நடாத்துதல், பாராளுமன்றத்தை கூட்டுவது மற்றும் ஒத்திவைத்தல்

## 21.3 பிரதி சபாநாயகரின் செயற்பாடுகள்

21.3.1 சபாநாயகர் மற்றும் பிரதி சபாநாயகர் மாணவர் பாராளுமன்றங்களில் தலைமைப்பீடத்தில் இல்லாத சந்தர்ப்பங்களில் பிரதி செயற்குழு தலைவர் மாணவர் பாராளுமன்றத்தை நடாத்த வேண்டும்.. அங்கு அவர் சபாநாயகரின் செயற்பாடுகளுக்கு அடிபணிவார்

21.3.2. சபாநாயகர், பிரதி சபாநாயகர் மற்றும் பிரதி செயற்குழுத் தலைவர் சபையில் இல்லாத சந்தர்ப்பங்களில் மாணவர உறுப்பினர் ஒருவர் மாணவர் பாராளுமன்றத்தில் தலைமை தாங்குவார்

### 21.4 பிரதமரின் செயற்பாடுகள்

21.4.1 மாணவர் பாராளுமன்றத்தின் ஒழுக்கத்தை பேணும் பொறுப்பு பிரதமரை சார்ந்நததாகும்

21.4.2 மாணவர் பாராளுமன்றத்தின் யாப்பு, நிதிசார் நடவடிக்கைகள் பிரதமரை சார்ந்நததாகும் சட்ட தேவைகளின் போது அதன் திருத்தங்களை முன்வைக்கும் பொறுப்பு பிரதமருக்கு உள்ளது.

21.4.3 பிரதமரே மாணவர் பாராளுமன்ற குழுவின் தலைவராவார்.

21.4.4 மாணவர் பாராளுமன்ற பிரதமருக்கு நல்லாட்சி சனநாயகம் தொடர்பான அமைச்சர் பதவியை வழங்குவதுடன், அந்த பதவிக்குரிய பின்வரும் பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டும். சனநாயகம், .மக்களின் இறையாண்மை, சட்டம்,போன்ற சனநாயக அடிப்படை குணாதிசயங்கள் தொடர்பாக பாடசாலை மாணவர்களை அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தை ஒழுங்கு செய்தல்

ஆந்த திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்காக தேர்தல் ஆணையம், தேர்தல் திணைக்களம், மாவட்ட தேர்தல் அலுவலரகள் மற்றம் ஒருங்கிணைப்பை கட்டியெழுப்பி மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தை ஒழுங்க செய்தல்

### 21.5 சபாநாயகரின் செயற்பாடு

21.5.1 மாணவர் பாராளுமன்ற கூட்டங்களுக்கு மாணவர்களை பங்கேற்க செய்வது ஓய்வ நேரங்களின் பின்னர் குறித்த நேரத்தில் மாணவர் பாராளுமன்றத்தை கூட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

21.5.2 மாணவர் பாராளுமன்றத்தின் பேச்சு பெயர் பட்டியலை தயாரிப்பது குறித்து மாணவர் பாராளுமன்ற செயலாளர் நாயகத்திற்கு உதவி புரிவது, மாணவர் பாராளுமன்றத்தின் ஒழுக்கத்தை பேணுவதற்கு பிரதமருக்கு துணைபுரிதல்.

### 21.6 மாணவர் பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் செயற்பாடுகள்

21.6.1 பாடசாலை மாணவர் பாராளுமன்ற செயலாளர் நாயகம், பிரதி செயலாளர் நாயகமார்களாகவும் வலய மாணவர் பாராளுமன்ற செயலாளர் நாயகம் மற்றும் பிரதி செயலாளர் நாயகத்தின் கடமைகளுக்காக தேப்படும்போது மறு அறிவித்தல் வரை பொதுவாக வலய மாணவர் பாராளுமன்றங்களில் கடமையில் ஈடுபடல் வேண்டும்.

21.6.2 அதிபரின் ஆலோசனைக்கமைவாக பாடசாலை மாணவர் பாராளுமன்றம் மற்றும் வலய கல்விப்பணிப்பாளரின் ஆலோசனையின் பேரில் வலய மாணவர் பாராளுமன்றத்தை கூட்டுதல்

21.6.3 மாணவர் பாராளுமன்றத்தில் சபாநாயகரிடம் சந்தியம் பெறல்

21.6.4 மாணவர் பாராளுமன்றத்தை பராமரிக்க சபாநாயகர் இல்லாத நிலையில் நடவடிக்கைகளுக்கு தலைமை தாங்க துணை சபாநாயகர்இ குழுக்களின் துணைத் தலைவர் அல்லது மாணவர் பிரதிநிதிக்கு ஆலோசனை வழங்குதல்

21.6.5 சபாநாகர், பிரதி சபாநாயகர், செயற்குழுத்தலைவர், பரதி செயற்குழுத்தலைவர், சபைமுதலவர், பிரதமர் வாக்கெடுப்பு மூலமாக ரெிவு செய்து நியமிக்க வேண்டுமெனில் வாக்கெடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுதல்

21.6 மாணவர் பாராளுமன்றத்தின் அமைச்சர்களை தெரிவு செய்து நியமிப்பதற்காக, மாணவர் பிரதிநிதிகளின் வேட்பு மனு பெற்றுக்கொள்ளல மற்றும் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் தெரிவுசெய்தல், அமைச்சு ஆலோசனை செயற்குழு தொடர்பில் உறுப்பினர்களை தெரிவு செய்தல்

21.6.7 மாணவர் பாராளுமன்றம் கலந்துரையாடலுக்க அல்லது விவாதத்திற்கு எடுக்கப்படும் பிரேரணைகள் மாணவர் பிரதிநிதிகளிடம் பெற்றுக்கொள்ளல் மற்றும் பொருத்தமான பிரேரணைகளை மாணவர் பாராளுமன்றத்திற்கு முன்வைப்பதற்கான சந்தர்ப்பங்களை வழங்குதல்

21.6.8 மாணவர் பாராளுமன்ற கூட்டங்களுக்கு நிகழ்ச்சி நிரல்களை தயாரித்தல், பேச்சார்களின் பெயர் பட்டியலை தயாரித்தல்

21.6.9 மாணவர் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் பிரேரணைகள் பாடசாலை மாணவர் அமைச்சுகளுக்கு இமணையாக நிகழ்ச்சித் திட்டங்கள் மூலமாக அமுல்படுத்துவதற்குத் தேவையான ஒழுங்குகளை மேற்கொள்தல்

21.6.10மாணவர் பாராளுமனறங்களில் ஒழுக்கத்தைப் பேணுதல், ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்தல்

21.6.11 மாணவர் பாராளுமன்றங்களில் வெற்றிடமாகும் இருக்கைகளுக்காக பிரதிநிதிகளை நியமிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்தல்

**7 .21 மாணவர் பாராளுமன்ற பிரதி செயலாளர் நாயகம் (நிர்வாகம்) செயற்பாடுகள்**

21.7.1 மாணவர் பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் கடமைகளுக்கு துணைபுரிதல்

21.7.2 மாணவர் பாராளுமன்றத்தைக் கூட்டுதல், மாணவர் பாராளுமன்றத்தின் பேச்சாளர் பெயர் பட்டியலைத் தளாரித்தல்

21.7.3 உரிய பிரிவுகளுனம் தொடர்பை ஏற்படுத்தல் மற்றும் ஒழுக்த்தை பேணுவதற்கு ந்டவடிக்கை மேற்கொள்தல்

**.218 மாணவர் பாராளுமன்ற பிரதி செயலாளர் நாயகம் (அபிவிருத்தி) செயற்பாடுகள்**

21.8.1 மாணவர் பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் கடமைகளுக்கு துணைபுரிதல்

21.8.2 மாணவர் பிரதிநிதிகள் மாணவர் பாராளுமன்றத்தில் விவாதம் புரிவதற்காக முன்வைக்கப்படும் பிரேரணைகளில் பொருத்தமான பிரேரணைகளை தெரிவு செய்து மாணவர் பாராளுமன்றத்திற்கு முன்னிலைப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்தல்

21.8.3 மாணவர் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் பிரேரணைகளை அமுல்படுத்துவதற்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்தல்.

21.8.4 பல அரசசார்ப்பற்ற நிறுவனங்களுடனான ஒருங்கிணைப்பு

## 22. வலய மாணவர் பாராளுமன்றம்

22.1. கல்வி வலய மட்டத்தில், வலய மாணவர் பாராளுமன்றங்கள் தாபிக்கப்படும்.

22.2. அம்மாணவர் பாராளுமன்றம் குறித்த வலயத்தின் பெயரால் அழைக்கப்படும்.

22.3 வலய மாணவர் பாராளுமன்றத்திற்காக கல்வி வலயத்திலுள்ள அனைத்து 1யுடீஇ 1ஊஇ 2 வகை பாடசாலைகளில் அமைக்கப்பட்டுள்ள மாணவர் பாராளுமன்றங்களின் மாணவர் பிரதிநிதிகளிலிருந்து வாக்களித்து தெரிவு செய்யப்படுகின்ற மாணவர் பிரதிநிதிகளைக் கொண்டதாக அமையும்.

22.4 வலய மாணவர் பாராளுமன்றப் பிரதிநிதிகளின் கட்டமைப்பு பின்வருமாறு அமையும்:

(அ) வலயத்தின் 1 – யுடீஇ 1-ஊஇ 2 வகைப் பாடசாலைகளில் ஒவ்வொரு பாடசாலையிலும் இருந்து இரண்டு பிரதிநிதிகள் வீதம் தெரிவு செய்யப்படுவர். கலப்பு பாடசாலையெனில் ஒரு மாணவனும் ஒரு மாணவியும் தெரிவு செய்யப்படுவர்.

(ஆ) பாடசாலை மாணவர் பாராளுமன்ற பிரதிநிதிகளிடம் வேட்பு மனு கோரப்பட்டு தேர்தலை நடாத்தி ஆகக்கூடியா வாக்குகளை பெறும் மாணவர் பிரதிநிதிக்ள இருவரை வலய மாணவர் பாராளுமன்ற பிரதிநிதகளாக தெரிவுசெய்து நியமிக்கப்படும்

(இ) வலயத்தின் பாடசாலைகளில் இன ரீதியான கட்டமைப்பின் அடிப்படையில் ஆகக் குறைந்த இனத்தைக் கொண்ட பாடசாலைகளுக்கு கீழ்வரும் வகையில் சலுகை உறுப்பினர் பதவி உரித்தாகும். அவ்வாறான சலுகை உறுப்பினர் பதவி கிடைக்கும் மொழி மூலப் பாடசாலைகளை மாணவர் தொகைக்கேற்ப பட்டியற்படுத்தி மிகக் கூடுதலான தொகை மாணவர்களைக் கொண்ட பாடசாலை தொடக்கம், உறுப்பினர் பதவி வழங்க ஆவனம் செய்தல் வேண்டும்.

(ஈ)சலுகை அடிப்படையிலான உறுப்பினர் பதவிகள் கீழ் காணப்படும் அட்டவனை 4 க்கு அமைவாகவே ஆகும். அவ்விதத்தில் வலய கல்விப் பணிபாளரினால் கணக்கிட்டு அறிவிக்கப்படல் வேண்டும்.

| | கல்வி வலயத்தில அந்தந்த இனங்களுக்குரிய பாடசாலை எண்ணிக்கை அடிப்படையில் சலுகை ஆசனங்கள் வழங்குவதற்காக கருத்திற்கொள்ளப்படும் சதவீதங்கள் | சதவீதங்களுக்கு அமைவாக வழங்கப்படும் சலுகை ஆசனங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | 50மூகுறைவான 45மூ அதிகமான | 01 |
| 02 | 45மூகுறைவான 40மூ அதிகமான | 02 |
| 03 | 40மூ குறைவான 35மூ அதிகமான | 03 |
| 04 | 35மூகுறைவான 30 மூஅதிகமான | 04 |
| 05 | 30மூ குறைவான 25 மூ அதிகமான | 05 |
| 06 | 25மூகுறைவான 20 மூ அதிகமான | 06 |
| 07 | 20மூகுறைவான 15 மூ அதிகமான | 07 |
| 08 | 15மூ குறைவான 10 மூ அதிகமான | 08 |

| | | |
|---|---|---|
| 09 | 10மூகுறைவான 5 மூ  அதிகமான | 09 |
| 10 | 5மூ குறைவான | 10 |

**அட்டவணை**4

22.5 வலயத்தின் மாணவர் பாராளுமன்ற உறுப்பினர்களை பாடசாலை மாணவர் பாராளுமன்றத்தில் முன்மொழிந்து அதனை வழிமொழிந்ததன் அடிப்படையில் தெரிவு செய்து வலயக் கல்விப்பணிப்பாளர்களுக்கு அதிபரால் அனுப்பப்படுதல் வேண்டும்.

22.6. .வலய மாணவர் பாராளுமன்றத்தில் செயலாளர் நாயகம், பிரதிச் செயலாளர் நாயகம் (அபிவிருத்தி) பிரதிச் செயலாளர் நாயகம் (நிருவாகம்), பிரதி செயலாளர் நாயகம் (ஒழுக்கம்) ஆகிய பிரதான பதவிகள் நான்கு உண்டு.

22.7 . வலய மாணவர் பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகம் பதவியானது பதவி வழியே வலயக்கல்விப் பணிப்பாளருக்கு உரித்தாகும்.

22.8 வலய மாணவர் பாராளுமன்றத்தின் பிரதிச் செயலாளர் நாயகம் (அபிவிருத்தி) பதவிக்காக, சமூக விஞ்ஞான பாடப்பணிப்பாளரையும் பிரதிச் செயலாளர் நாயகம் (நிருவாகம்) பதவிக்காக சமூக ஒருமைப்பாடு மற்றும் சமாதானக் கல்வி வலய இணைப்பாளரையும் பிரதி செயலாளர் நாயகம் (ஒழுக்கம்) பதவிக்காகப் பொருத்தமான ஓர் அதிகாரியையும் வலயக் கல்விப் பணிப்பாளர் நியமிக்கவேண்டும்.

22.9 வலய மாணவர் பாராளுமன்றம் தொடர்பாக அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்கள் தெரிவு செய்து நியமிக்கும் போது

(அ) மாணவ பிரதிநிதிகளின் விருப்புக்கள், அனுபவங்களுக்கு அமைய அமைச்சர்களுக்காகக் குழுக்களாக்கல்.

(ஆ) ஆளையாள் அறிமுகமாவதற்கும், அவரவர் திறமைகளை இனங்கண்டு கொள்வதற்கும் அனுபவங்களை பரிமாறிக்கொள்வதற்கும் உளசமூகச் செயற்பாடுகளை உள்ளடக்கிய ஒரு வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.

(இ) அமைச்சர் மற்றும் பிரதி அமைச்சர் பதவிகளுக்குத் தெரிவு செய்வதற்குப் பொருத்தமான இரண்டு மாணவர்கள் வீதம் முன்மொழிந்து, வழிமொழிந்து முன்வைப்பதற்கு குழுக்களுக்குச் சந்தர்ப்பம் வழங்க வேண்டும்.

**வலய மாணவர் பாராளுமனறத்தில் மாணவர் பதவி மற்றும் அமைச்சு, பாடசாலை மாணவர் பாராளுமன்றத்தின் மாதிரியின் அமைவாகும்**

22.10 ஆரம்ப (கன்னி) அமர்வுக்கு முன், சபாநாயகர் தவிர பிரதான பதவிகளை வகிக்கும் எல்லோரும் அமைச்சுக்களுக்காக தெரிவுசெய்யப்பட்ட அமைச்சர்களும், பிரதி அமைச்சர்களும் மாணவர் பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொள்ளல் வேண்டும்.

22.11 அதன் பின்னர் ஆரம்ப அமர்வை நடத்துதல் வேண்டும். அவ்வமர்வின்போது முதன்முதலாக சபாநாயகர் பதவியை நிறைவேற்றி அதற்கு பின்னர் பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் முன்னிலையில், சத்தியப் பிரமாணம் செய்துக்கொள்ளல் வேண்டும்.

22.12 அதன் பின்னர் சகல உறுப்பினர்களும் சபாநாயகரின் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொள்ளல் வேண்டும்.

22.13 சபாநாயகர் வலயப் பாராளுமன்றத்தை நடத்திச்சென்று எதிர்வரும் நடவடிக்கைகளைத் திட்டமிடுதல் வேண்டும்.

22.14 சபை கூடும் தினத்தைத் தீர்மானித்து நிறைவேற்றிய பின்னர் சபையை ஒத்தி வைத்தல் வேண்டும்

**22.15 வலய மாணவர் பாராளுமன்றத்தின் பொறுப்புக்கள்:**

(அ) வலய மாணவர் பாராளுமன்றத்தின் நடவடிக்கைகள் தொடர்பாக முறையான அறிக்கைகள் பிரதிச்செயலாளர் நாயகத்தினால் (நிருவாகம்) தொடர்ச்சியாக பேணப்படுதல் வேண்டும்.

(ஆ) நிறைவேற்றப்படும் பிரேரணைகள் செயலாளர் நாயகத்தினால் பாடசாலைகளுக்கு உரியவாறு வழங்கப்படுதல் வேண்டும்.

(இ) அப்பிரேரனைகளை நடைமுறைப்படுத்தலானது பாடசாலைப் பாராளுமன்றத்தின் குறித்த அமைச்சினால் செய்யப்படுதல் வேண்டும்.

மேற்படி 22.10 தொடக்கம் 22.15 வரையிலான கருமங்களுக்காகப் பொருத்தமானவாறு ஒரு நாள் செயலமர்வு ஒன்றினை அல்லது இரண்டு நாள் செயலமர்வொன்றினைத் திட்டமிட்டு நடத்தலாம்.

## 23 மாகாண மாணவர் பாராளுமன்றம்

23.1 மாகாண மாணவர் பாராளுமன்றம் மாகாண மட்டத்தில் தாபிக்கப்படும்.

23.2 அது அந்தந்த மாகாணத்தை சேர்ந்த வலய மாணவர் பாராளுமன்றங்களில் பின்வரும் பதவிகளை வகிக்கும் பிரதிநிதிகளைக் கொண்டமைதல் வேண்டும்.

- சபாநாயகர்
- பிரதமர்
- சபை முதல்வர்
- பிரதிச் சபாநாயகர்
- பிரதிச் செயற்குழுத் தலைவர்
- அமைச்சர்கள் பத்துப் பேர் (10)

23.3 மாகாண மாணவர் பாராளுமன்றத்தின் கட்டமைப்பு பாடசாலை மற்றும் வலய மாணவர் பாராளுமன்றங்களின் கட்டமைப்பை ஒத்ததாகும்.

23.4 மாகாண மாணவர் பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகம் பதவியானது, பதவி வழியாக மாகாணக் கல்விப் பணிப்பாளரைச் சாரும்.

23.5 பிரதிச் செயலாளர் நாயகம் (அபிவிருத்தி) பதவி, மாகாண சமூக விஞ்ஞான பாடங்களின் இணைப்பு அதிகாரிகளுக்கும், பிரதிச் செயலாளர் நாயகம் (நிர்வாகம்) பதவி, மாகாண சமூக ஒருமைப்பாட்டு மற்றும் சமாதானக்கல்வி இணைப்பு அதிகாரிக்கும் பதவி வழியாக உரித்தாகும். பிரதிச் செயலாளர் நாயகம் (ஒழுக்கம்) பதவிக்காக பொருத்தமான ஒருவரை நியமிக்கும் அதிகாரம் மாகாண மாணவ பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தைச் சாரும்.

### 23.6 மாகாண மாணவர் பாராளுமன்ற அமர்வுகளைக் கூட்டுதல்

(அ.) ஒவ்வொரு பாடசாலைத் தவணையிலும் ஒரு தடவையேனும் மாகாண மாணவர் பாராளுமன்ற அமர்வு கட்டாயமாகக் கூட்டப்படுதல் வேண்டும்.

(ஆ.) மாகாண மாணவர் பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகத்தின் அறிவுறுத்தல்களின்பேரில் பிரதிச் செயலாளர் நாயகம் (நிர்வாகம்) அவர்களால் அமர்வுகள் கூட்டப்படுதல் வேண்டும்.

23.7 மாகாண மாணவர் பாராளுமன்ற அமர்வுகளை நடத்துதல், அதிகாரிகளைத் தெரிவு செய்தல் என்பன வலய மாணவர் பாராளுமன்றத்தில் செய்யப்பட்ட முறையிலேயே செய்யப்படுதல் வேண்டும்.

### 23.7 மாகாண மாணவர் பாராளுமன்றத்தின் பொறுப்புக்கள்

இது மாகாணத்தினுள் மாணவர் பிரதிநிதிகளின் அனுபவங்களை பகிர்ந்து பரிமாறிக் கொள்ளும் ஒரு வேலைத்திட்டமாகும். அதன் மூலம் ஒரு மாகாணம் என்ற வகையில் கவனஞ் செலுத்த வேண்டிய சமகாலத் தேவைகளை இனங்காண்பதற்கும், தேசிய மட்ட வேலைத்திட்டங்களுக்காக, மாகாண மட்டப் பொறுப்புக்களைக் கலந்துரையாடி இணக்கப்பாட்டிற்கு வருவதற்கும் சந்தர்ப்பம் கிடைக்கும். அதற்கமைய மாகாண மாணவர் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் பிரேரணைகள், வலய மாணவர் பாராளுமன்ற செயலாளர் நாயகத்தினால் பாடசாலைகளுக்கு வழங்கப்படும். அவற்றை நடைமுறைப்படுத்துவற்கு பாடசாலை மாணவர் பாராளுமன்றத்திற்குச் சந்தர்ப்பம் கிடைக்கும். அவ்வாறே மாகாணத்தினால் இனங்காணப்பட்ட விசேட செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவற்கும் மாகாண மாணவர் பாராளுமன்றத்திற்குச் சந்தர்ப்பம் உண்டு.

## 24 தேசிய மாணவர் பாராளுமன்றம்

24.1 தேசிய மாணவ பாராளுமன்றமானது, நாட்டின் சகல கல்வி வலயங்களிலும் தாபிக்கப்பட்டுள்ள வலய மாணவர் பாராளுமன்றப் பிரதிநிதிகளைக் கொண்டமையும்.

24.2 ஒரு வலயத்தில் மாணவர் பிரதிநிதிகளாக இருவரை, வலய மாணவ பாராளுமன்றத்தில் முன்மொழிந்தும், வழிமொழிந்தும் தெரிவு செய்து கொள்ளல் வேண்டும்.

24.3 தேசிய மாணவர் பாராளுமன்றக் கட்டமைப்பானது, மாகாண, வலய, பாடசாலை மாணவர் பாராளுமன்றத்தின் கட்டமைப்புக்கு ஒப்பானது.

24.4 தேசிய மாணவர் பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகம் பதவியானது பதவி வழியாக கல்வி அமைச்சின் செயலாளரைச் சாரும்.

24.5 பிரதிச் செயலாளர் நாயகம் (அபிவிருத்தி) பதவி, கல்வியமைச்சின் மேலதிக செயலாளர் தர விருத்தி மற்றும் பிரதிச் செயலாளர் நாயகம் (நிருவாகம்) பதவி, கல்வி அமைச்சின் இணைப்பாடவிதான செயற்பாடுகள், மாணவர் ஆலோசனை மற்றும் சமாதானக் கல்விப் பணிப்பாளருக்கும், பிரதி செயலாளர் நாயகம் (ஒழுக்கம்) பதவி, கல்வி அமைச்சின் தேசிய மொழிகள் மற்றும் மானிடவியல் பணிப்பாளருக்கும் பதவி வழியே உரித்தாகும்

24.6 தேசிய மாணவர் பாராளுமன்ற இணைப்பாளர் மற்றும் நெறிப்படுத்தல் நடவடிக்கைகள், கல்வி அமைச்சின் மாணவர் பாராளுமன்ற நடவடிக்கைகளுக்கு பொறுப்பான

அதிகாரியையும், தேசிய கல்வி நிறுவக குடியியற் கல்விப்பாடத்துக்குப் பொறுப்பான அதிகாரியையும் சாரும்.

24.7 தேசிய மாணவர் பாராளுமன்ற பதவிகள் மற்றும் அப்பதவிகளுக்கு தெரிவு செய்தலானது வலய மாணவர் பாராளுமன்ற நடைமுறைகளுக்கு அமைவாகச் செய்யப்படுதல் வேண்டும்.

24.8 தேசிய மாணவர் பாராளுமன்றம் ஆண்டுக்கு ஒருதடவையேனும் நடத்தப்படுதல் வேண்டும். அதனை ஒரு நாள் செயலமர்வு மற்றும் இரண்டு நாள் அமர்வு என்றவாறு நடத்துதல் வேண்டும்.

24.9 இந்த இரண்டு நாள் அமர்வின்போது அந்தந்த அமைச்சருக்குரிய விடயப்பரப்புக்கள் குறித்து மாணவர் பிரதிநிதிகளுக்கு விவாதிக்கவும் கருத்துத் தெரிவிக்கவும் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

(அ) தேசிய மாணவர் பாராளுமன்றச் செயலமர்வின்போது மாகாண மட்டத்தில் அந்தந்த மாகாணத்திலிருந்து தேசிய மாணவர் பாராளுமன்றத்தை பிரிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகள் ஒன்றுகூடி, அந்தந்த விடயம் தொடர்பாகத் தத்தமது மாகாணப் பிரச்சினைகள் மற்றும் போக்குகள் தொடர்பாகக் கலந்துரையாடி, ஒட்டு மொத்தமாக, அந்தந்த விடயம் குறித்துப் பேசும் பிரதிநிதிகளைத் தெரிவு செய்து கொள்ள வேண்டும்.

(ஆ) இவ்வாறாக மாகாண மட்டத்தில் ஒன்றுகூடிக் கலந்துரையாடும்போது, அந்தந்த விடயம் தொடர்பாகப் பேசும் மாணவர் பிரிநிதிகளின் பெயர், தாம் பேச இருக்கும் விடயங்களின் சுருக்கம் ஆகியவற்றை தேசிய மாணவர் பாராளுமன்றப் பிரதிச் செயலாளர் நாயகத்துக்கு (நிருவாகம்) எழுத்து மூலம் வழங்குதல் வேண்டும்.

(இ) அந்தந்த விடயப் பரப்பின் கீழ் கருத்துத் தெரிவிப்பதற்காக மாகாணக் கல்வி அதிகாரத்துவப் பிரதேசத்தைச் சேர்ந்த 10 பிரதிநிதிகளுக்கும் சந்தர்ப்பம் உரித்தாகும்.

(ஈ) ஒரு விடயப்பரப்பின் கீழ் தமது பிரதேசத்தின் மீது செல்வாக்குச் செலுத்தும் பிரச்சினைகள், அபிவிருத்திப் பிரேரணைகள் தொடர்பாக கருத்துத் தெரிவிப்பதற்கு ஒரு மாணவர் பிரதிநிதிக்கு ஐந்து (5) நிமிட நேர அவகாசம் வழங்கப்படும்.

(உ) மாகாணப் பிரதிநிதிகளின் கருத்துக்களை மீளாய்வு செய்து ஒட்டுமொத்த விடயம் தொடர்பான மீளாய்வை முன்வைப்பதற்கு விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சருக்கு பத்து (10) நிமிட நேர அவகாசம் உரித்தாகும்.

## 24.10 தேசிய மாணவர் பாராளுமன்றத்தின் பொறுப்புக்கள்

இது தேசிய மட்டத்தில் மாணவர் பிரிநிதிகளின் அனுபவங்களைப் பகிர்ந்து பரிமாறிக்கொள்ளும் ஒரு வேலைத்திட்டமாகும். இதன் மூலம் தேசிய மட்டத்தில் கவனம் செலுத்த வேண்டிய நிகழ்ச்சித் திட்டங்களைக் கலந்துரையாடவும் இணக்கப்பாடுகளை எட்டவும் தேசிய மாணவர் பாராளுமன்றத்துக்கேயுரிய தனித்துவமான நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்கும் சந்தர்ப்பம் கிட்டும். தேசிய மாணவர் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் பிரேரணைகளை மாகாண மாணவர் பாராளுமன்றத்துக்கு வழிப்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்காக வலய மாணவர் பாராளுமன்றத்துக்கு வழிப்படுத்துதல் வேண்டும்.

**உப அட்டவணை 1**

## மாணவர் பாராளுமன்றத்தில் அமைச்சுக்கள் பத்து (10) ஆகும்..

1. மாணவர் நடத்தை விருத்தி மற்றும் மாணவர் நலன்புரி அமைச்சு.
2. மாணவர் திறன்கள் மற்றும் புத்தாக்க அலுவல்கள் அமைச்சு.
3. பாடசாலைகளுக்கு இடையிலான நட்புறவைக் கட்டியெழுப்பும் மற்றும் விருத்தி செய்யும் அமைச்சு.
4. கல்வி மனிதவள அபிவிருத்தி மற்றும் தகவல் தொடர்பாடல் அமைச்சு.
5. பண்பாடு, சமய அலுவல்கள் மற்றும் விழுமிய மேம்பாட்டு அமைச்சு.
6. சமூக நல்லிணக்கம் மற்றும் மாணவர் பாதுகாப்பு அமைச்சு.
7. சமூகத் தொடர்பு மேம்பாட்டு மற்றும் சமூகசேவை அமைச்சு.
8. சுகாதாரம், போசாக்கு மற்றும் விளையாட்டு துறை அமைச்சு.
9. விவாசாய மற்றும் சுற்றாடல் அபிவிருத்தி அமைச்சு.
10. பௌதிக வள அபிவிருத்தி மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு.

### 1. மாணவர் நடத்தை விருத்தி மற்றும் மாணவர் நலன்புரி அமைச்சு

- மாணவர் சுய ஒழுக்கத்தைக் கட்டியெழுப்புதல்.
- பொது ஒழுக்கநெறிக் கோவையொன்றினை விதித்தலும் நடைமுறைப்படுத்துதலும்.
- சுற்றுநிருபத்திற்கு அமைவாக மாணவர் சிற்றுண்டிச் சாலைகளை நடத்திச்செல்ல ஆவன செய்தல்.
- மாணவர் ஆலோசனை மற்றும் உள-நல விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- மாணவரது விருத்தியை இலக்காகக் கொண்டு பெற்றோரைத் தெளிவூட்டுதல்.

- வெவ்வேறு குறைபாடுகள் மற்றும் விசேட தேவைகள் உள்ள பிள்ளைகள் தொடர்பாக குறித்த பிரிவினருடன் இணைப்பாக்கஞ் செய்து வேலைத்திட்டங்களை முன்னெடுத்தல்.
- சமூகத்தில் இடருக்கு ஆளாகியுள்ள மக்களின் தேவைகளை இனங்காணலும் அதற்காக உதவும் வேலைத்திட்டங்களைப் பிரேரித்தலும் நடைமுறைப்படுத்தலும்.
- உதவி தேவைப்படும் பாடசாலை மாணவரை இனங்காணல், அவர்களது பிரச்சினைகளைக் கலந்துரையாடல், அவர்களுக்காக உதவும் வேலைத்திட்டங்களை ஒழுங்குசெய்தல்.
- பாடசாலை மாணவரது நலனோம்புகை நடவடிக்கைகள் குறித்துக் கலந்துரையாடல், பல்வேறு வேலைத்திட்டங்களைப் பிரேரித்தல், அவற்றை நடைமுறைப்படுத்தல்.
- பாடசாலை உபகரணங்களைச் சகாய விலையில் பெற்றுக்கொள்வதற்கான உத்திகளை இனங்காணலும் நடைமுறைப்படுத்தலும்.
- மாணவர் - ஆசிரியர்களுக்குப் போக்குவரத்துச் சேவை வழங்கும் அரச மற்றும் தனியார் நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பு.
- பாடசாலை மாணவர்களின் நலனோம்பும் அலுவல்கள் தொடர்பான கருத்துக்களையும் பிரேரணைகளையும் பெற்று பயன்மிக்க கருத்துக்களை நடைமுறைப்படுத்தல்.
- பாடசாலை மாணவரின் நடத்தை விருத்திக்குத் தடையாகவுள்ள உள்வாரி, வெளிவாரிச் செயற்பாடுகளை இனங்காணலும் அவற்றை நிவர்த்திப்பதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதலும்.
- பாடசாலையிலும் வீட்டிலும் தெருவிலும் மாணவரது ஒழுக்கம் தொடர்பாக சுய மதிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
- புகைப்பிடித்தல், மதுபாவனை, போதைப்பொருள் பாவனை ஆகியவற்றை மறுதலிக்கும் வேலைத்திட்டங்களைப் பாடசாலையில் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தல்.
- பாடசாலையை வந்தடையத்தக்க ஆபாச வெளியீடுகள், ஆபாச மென்பொருள்களை பயன்படுத்தத்தக்க வசதிவாய்ப்புக்களையும் பிரவேச வழிகளையும் தடுப்பதற்கு ஆவன செய்தல்.
- மாணவர்களுக்கான ஆளுமை விருத்திச் செயற்பாடுகளை முன்னெடுத்தல். (முன் பிள்ளை அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் போன்றவை.)

**2. மாணவர் திறன்கள் மற்றும் புத்தாக்க அலுவல்கள் அமைச்சு**

- மாணவர்கள் பாடசாலைக்கு வருவதையும் வெளியேறுவதையும் ஒழுங்கு முறைப்படுத்தல்.
- ஆசிரியர் - மாணவர் இடைத்தொடர்புகளை விருத்திசெய்யும் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

- மாணவர்க்கு வெளி உலகைப் பரிச்சயப்படுத்துவற்குத் தேவையான பல்வேறு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- நாளாந்தக் கருமங்களை நிறைவு செய்துகொள்வற்காக வெவ்வேறு நிறுவனங்களுடன் செயற்படுவற்குத் தேவையான தேர்ச்சிகளை வளர்த்தல், மாணவரது திறன்கள், ஆற்றல்கள், ஊக்கங்களுக்குப் பொருத்தமானவாறு புத்தாக்கங்கள் படைப்பதற்கான வசதிவாய்ப்புக்களை உருவாக்குதல்.

## 3. பாடசாலைகளுக்கு இடையிலான நட்புணர்வைக் கட்டியெழுப்பும் மற்றும் விருத்தி செய்யும் அமைச்சு

- பாடசாலைகளுக்கு இடையே அறிவையும் அனுபவங்களையும் பகிர்ந்து பரிமாறிக்கொள்ளும் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டு நடவடிக்கைகளுக்கு ஊக்கமளித்தல்.
- பாடசாலைகளுக்கு இடையேயான பங்குபற்றுகை மூலம் சமுதாய சேவைகள் மற்றும் கல்விச் சேவைகளை முன்னெடுத்தல்.
- பிரதேச மாணவர்களதும் சமுதாயத்தினதும் பண்பாட்டு, பொருளாதார, சமூகப் பிரச்சினைகளைக் கலந்துரையாடலும் தீர்வு வழிகளைப் பிரேரித்தலும் செயற்படுத்தலும்.
- சமூக ஒருமைப்பாட்டுக்காகவும் நாட்டைக் கட்டியெழுப்புவதற்காகவும் செயற்படும் பல்வேறு அரச நிறுவனங்களுடன் நல்ல இணைப்பாக்கத்தைப் பேணிவருதலும் அவர்களுடன் கூட்டாக வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தலும்.
- கல்வி வலயத்திலும் மாகாணத்திலும் ஒட்டுமொத்தப் பாடசாலைகளுடன் பரந்துபட்ட சமூக ஒருமைப்பாட்டைக் கட்டியெழுப்புவதற்காக முறைமையான வேலைத்திட்ட மொன்றினைத் தயாரித்தல்.
- சமூக ஒருமைப்பாடு மற்றும் நாட்டைக் கட்டியெழுப்புதல் தொடர்பாகப் பாடசாலைச் சமுதாயத்தினர் ஆற்ற வேண்டிய பணிகள் தொடர்பாக பரந்துபட்ட கலந்துரையாடலைக் கட்டியெழுப்புதல்.

## 4. கல்வி, மனித வள அபிவிருத்தி மற்றும் தகவல் தொடர்பாடல் அமைச்சு

- பாடசாலை மாணவரின் கல்விசார் பிரச்சினைகள் மற்றும் தேவைகளை இனங்காணலும் தீர்வுப் பிரேரணைகளை முன்வைத்தலும்.
- கல்வியில் பயன்தரு அபிவிருத்தி தொடர்பான பிரேரணைகளை முன்வைத்தலும் கலந்துரையாடலுக்குட்படுத்தலும் பாடசாலையில் தரமிக்க கற்றல் சூழலை உருவாக்கலும்.

- சுய கற்றல் சந்தர்ப்பங்களை இனங்கண்டு அவற்றை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான பின்னணியை உருவாக்கல்.
- பாடசாலையில் தொடர்பூடக நிகழ்ச்சித் திட்டங்களை ஆக்கபூர்வமாகச் செயலுருப்படுத்தல்.
- தகவல் தொடர்பாடலுக்காக பாடசாலையில் நடைமுறையிலுள்ள நிகழ்ச்சித் திட்டங்களை முறைமைப்படுத்துவதற்குத் தேவையான உதவி ஒத்தாசைகளை வழங்குதல்.
- பாடசாலையில் தொழிற்கல்விச் சந்தர்ப்பங்களை விருத்தி செய்தலும் உரிய யாப்புக்களைத் தயாரித்தலும்.
- எதிர்கால அறைகூவல்களை வெற்றிகொள்வற்காக தொழிற்சந்தை தொடர்பாக அறிவூட்டம் செய்யும் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- இலங்கையில் தொடர்பூடகங்களின் பயன்பாடு மற்றும் ஊடக எழுத்தறிவு தொடர்பான நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
- சுதேச மற்றும் வெளிநாட்டு, பொருளாதார, சமூக அரசியல் பண்பாட்டுப் புதுப்போக்குகள் தொடர்பாகக் கலந்துரையாடல்களையும் மாநாடுகளையும் ஒழுங்குசெய்தல்.
- மாணவர்களது உள்ளத்துக்குப் பொருத்தமற்ற பல்வேறு ஊடக நிகழ்ச்சிகள் தொடர்பாக விரிவான கலந்துரையாடலை உருவாக்குவதும் அவ்வாறான நிகழ்ச்சிகளை சனநாயக ரீதியில் மறுதலித்தலும் எதிர்ப்பை வெளியிடலும்.
- வெவ்வேறு வெகுசனத் தொடர்பு ஊடக நிறுவனங்களுடன் சிறந்த இணைப்பாக்கத்தைக் கட்டியெழுப்புதல்.
- தலைமைத்துவ மற்றும் ஆளுமை விருத்திக்காக மாணவர்களுக்கான விசேடமான வேலைத்திட்டங்களையும் செயற்றிட்டங்களையும் முன்னெடுத்தல்.

**5. பண்பாட்டு சமய அலுவல்கள் மற்றும் ஒழுக்க மேம்பாட்டு அமைச்சு**

- பாடசாலை தொடங்கும் போதும் பாடசாலை முடிவின் போதும் சமயக் கருமங்களுக்கு முதலிடமளித்துச் செயற்படும் நிலையைப் பேணிவருதல்.
- பாடசாலைக்குரிய தனித்துவமான சமய வேலைத்திட்டங்களையும் சமயங்களுக்கு இடையிலான வேலைத்திட்டங்களையும் ஒழுங்கு செய்தல்.
- பாடசாலைப் பண்பாட்டைப் பாதுகாத்தவாறு விழுமியங்களைக் கட்டியெழுப்பும் முறையியல்களை வகுத்து நடைமுறைப்படுத்தல்.
- பாடசாலையில் மாணவரது ஒழுக்க விருத்திக்காக ஒழுக்கக் கோவையொன்றைக் கட்டியெழுப்புதல்.

- அழிந்து செல்லும் நிலையிலுள்ள மரபு ரீதியான பண்பாட்டு அம்சங்களை இனங்காணலும் அவற்றைப் பாதுகாப்பதற்கான வேலைத்திட்டங்களைத் திட்டமிடலும் நடைமுறைப்படுத்தலும்.
- தேசிய மரபுரிமையை இனங்காண்பதற்கான வேலைத்திட்டங்கள் மற்றும் அழிந்து செல்லும் தேசிய மரபுரிமைகள் தொடர்பாக பரந்துபட்ட கலந்துரையாடலைக் கட்டியெழுப்புதல்.
- இரசணையுணர்வை மேம்படுத்தும் அழகியல் வேலைத்திட்டங்களை நடைமுறைப் படுத்துதல்.
- விழுமிய விருத்திக்குப் பொருத்தமான வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
- இன ரீதியிலும் பிரதேச ரீதியிலும் வேறுபடும் வழக்காறுகளை இனங்காண்பற்கான வேலைத்திட்டங்களை ஒழுங்குசெய்தலும் நடைமுறைப்படுத்துதலும்.
- பல்வகைமையின் அழகை அனுபவிப்பற்காக பண்பாடுகளுக்கு இடையிலான வேலைத்திட்டங்களை ஒழுங்குசெய்தல்.
- பண்பாட்டின் சமத்துவம் மற்றும் பண்பாட்டின் வளர்ச்சி தொடர்பான செயலமர்வுகள், மாநாடுகள் மற்றும் விரிவுரைகளை ஒழுங்குசெய்தல்.
- இலங்கை நாட்டார் கலைகள், கிராமியக் கலைகளை அறிமுகஞ்செய்தல்.
- இலங்கையின் பாரம்பரிய கலை மரபுரிமைகளை அறிமுகஞ் செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தலுக்கான வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

**6. சமூக நல்லிணக்கம் மற்றும் மாணவர் பாதுகாப்பு அலுவல்கள் அமைச்சு**

- முரண்பாடு தீர்த்தல் முறையியல்களை நடைமுறைப்படுத்துதல்.
- பாடசாலையிலும் பாடசாலைக்கு வெளியேயும் மாணவரது பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பாக ஒழுங்கமைந்த வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- மாணவர் பாதுகாப்பு தொடர்பாக பரந்துபட்ட வகையில் செயற்படும் நிறுவனங்களுடன் நல்ல இணைப்பாக்கத்தைப் பேணிவருதல்.
- பிரச்சினைவயப்பட்ட குடும்பங்கள், பிரதேசங்களை இனங்கண்டு பொருத்தமான வேலைத்திட்டமொன்றினை நடைமுறைப்படுத்துதல்.
- பெற்றோரை இழந்த பிள்ளைகளுக்காக கவனிப்பு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
- சிறுவர் ஒழுக்கவீனம், சிறுவர் துஷ்பிரயோகம் ஆகியவற்றைத் தவிர்க்க நடவடிக்கை எடுத்தல்.

**7. சமுதாயத் தொடர்பு விருத்தி மற்றும் சமூக சேவைகள் அமைச்சு**

- பாடசாலை மாணவர்கள் நிறைவேற்றத்தக்க சமுதாய சேவைகளை இனங்காணலும் சமுதாய சேவை வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதலும்.
- பாடசாலையும் சமுதாயமும் கூட்டிணைத்து வேலைத்திட்டங்களை ஒழுங்குசெய்தலும் பல்வேறு சமுதாய வேலைத்திட்டங்களில் ஈடுபடுதலும்.
- வெவ்வேறு அரச நிறுவனங்களுடனும் தனியார் நிறுவனங்களுடனும் இடைத்தொடர்புகளைக் கட்டியெழுப்புவதற்கான உபாய வழி வேலைத்திட்ட மொன்றினைத் தயாரித்தல்.
- பிரதேச மக்களின் பொதுவான தேவைகள் தொடர்பாக பரந்துபட்ட வகையில் கலந்துரையாடலைக் கட்டியெழுப்பி பல்வேறு வேலைத்திட்டங்களை நடைமுறைப் படுத்துதல்.
- பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் மற்றும் சமுதாய அமைப்புக்களுடன் பரந்துபட்ட இடைத்தொடர்புகளைக் கட்டியெழுப்புதல்.
- பாடசாலையை விட்டுச்சென்ற மாணவர்களுடன் தொடர்புகளைப் பேணி அவர்களது பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடலைக் கட்டியெழுப்புதல்.
- பாடசாலை மாணவர்களதும் அவர்களது குடும்பங்களதும் தனிப்பட்ட பிரச்சினைகளை இனங்காணலும் அப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பொருத்தமான வேலைத்திட்ட மொன்றினைத் தயாரித்தலும்.
- சகல சாரணிய மாணவர் படையணி வேலைத்திட்டங்களையும் முறைமையாக நடத்திச் செல்லல்.

8. **சுகாதாரம், போசாக்கு மற்றும் விளையாட்டு துறை அமைச்சு**

- பாடசாலையில் சுகாதாரம் மற்றும் உடனலம் தொடர்பான நற்பழக்கங்களை மேம்படுத்துவற்காக முறைமையான வேலைத்திட்டமொன்றினைத் தயாரித்தலும் நடைமுறைப்படுத்துதலும்.
- சுகாதாரம், உடனலம் ஆகியவற்றின் மீது நேரடியாகச் செல்வாக்கு செலுத்தும் பிரச்சினைகள் தொடர்பாக முறைமையான அர்த்தமுள்ள உரையாடல்களை நடத்துதல்.
- பாடசாலை மாணவர்களது போசாக்கு நிலையை மேம்படுத்துவதற்குப் பொருத்தமான வேலைத்திட்டமொன்றினைத் தயாரித்தல்.
- போசாக்கு வேலைத்திட்டங்களுக்காக சமுதாயத்தினரின் செயலூக்கமுள்ள பங்களிப்பைப் பெறுதல்.
- பாடசாலையின் முதலுதவி நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துதல். (செஞ்சிலுவை, புனித ஜோன், சௌக்கிய தானம் போன்றவை)
- பாடசாலைக்கும் சுகாதாரம் மற்றும் போசாக்கு தொடர்பான நிறுவனங்களுக்கும் சமுதாயத்துக்கும் இடையே பரந்துபட்ட இடைத்தொடர்புகளைக் கட்டியெழுப்புதலும் உதவிகளைப் பெறுதலும்.

- பாடசாலை மாணவர் உடல், உள, சுகாதாரச் சீர்கேடுகளுக்கு ஏதுவாகும் வெளிவாரி மற்றும் உள்வாரிச் செயல்கள் தொடர்பாகக் கவனஞ்செலுத்தி சுகாதார மேம்பாட்டுக்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- தொற்றும் நோய்கள் பரவுவதைத் தடுத்தல் மற்றும் ஏனைய நோய்கள் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக பரந்துபட்ட உரையாடல் மற்றும் வேலைத்திட்டமொன்றினை முன்னெடுத்தல்.
- நிறைவான போசாக்குக்காக சுதேச உணவுகளின் நுகர்வை ஊக்குவித்தல்.
- விளையாட்டு வேலைத்திட்டங்களை முறைமையாக ஒழுங்குசெய்ய நடவடிக்கை எடுத்தல்.
- விளையாட்டு அபிவிருத்தி தொடர்பாக பரந்துபட்ட கலந்துரையாடலைக் கட்டியெழுப்புதல்.
- மரபு ரீதியான விளையாட்டுக்களை பாடசாலையில் அறிமுகஞ் செய்தலும் அருகிச் செல்லும் விளையாட்டுக்களை மேம்படுத்துதலும்.
- பாடசாலை விளையாட்டு நிகழ்வுகளின்போது விழுமியங்களும் பாடசாலை ஒழுக்கமும் குறைவடைதல் தொடர்பாகக் கலந்துரையாடலும் வேலைத்திட்டமொன்றினைத் தயாரித்தலும்.

9. **விவசாயம் மற்றும் சுற்றாடல் அபிவிருத்தி அமைச்சு**

- பாடசாலைச் சுற்றாடலில் சுத்தத்தைப் பேணுதல்.
- பாடசாலை சூழலை அழகுபடுத்துவற்காக செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
- கழிவுப்பொருட்களை மீள் சுழற்சிப்படுத்துதல் தொடர்பான கலந்துரையாடலைக் கட்டியெழுப்பி வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
- கூட்டெரு தயாரித்தலையும் பயன்படுத்தலையும் ஊக்குவித்தல்.
- சூழல் சார்ந்த உணர்தன்மையினை மேம்படுத்தத்தக்க வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- பிரதேசத்தில் சுற்றாடல் அழிவுகள் தொடர்பான தகவல்களைத் திரட்டுதலும் சூழல் அழிவுறுவதை இழிவளவாக்க நடவடிக்கை எடுத்தலும்.
- பல்வேறு சுற்றாடல் நடவடிக்கைகள் தொடர்பாக அரச நிறுவனங்களுடனும் தனியார் தொண்டர் அமைப்புக்களுடனும் தொடர்புகளைக் கட்டியெழுப்பிக் கொள்ளல்.
- தேசிய விவசாய மற்றும் சுற்றாடல் கொள்கைகளை பாடசாலையில் நடைமுறைப் படுத்தல்.
- தேசிய உற்பத்திகளின் நுகர்வை ஊக்குவித்தலும் அவற்றின்பால் வழிப்படுத்தலுக்கான வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தலும்.

- பாடசாலைப் பண்ணை, வீட்டுத்தோட்டச் செய்கை, (மூலிகை) ஔடதத் தாவரப் பூங்காக்கள், வனப்பூங்காக்கள் ஆரம்பிக்க வழிப்படுத்தல்.
- பிரதேச கமத்தொழிற் பிரச்சினைகள் குறித்து கவனஞ் செலுத்துதலும் தீர்வு வழிகளைக் காணுதலும்.
- மரபு ரீதியான விவசாய முறைகளை இனங்காணலும் அவற்றை விரிவுபடுத்துவதற்கான வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதலும்.
- மரபு ரீதியான விவசாய உபகரணங்களைப் பாதுகாக்கும் வேலைத்திட்டங்களை நடத்துதல்.
- பாடசாலையில் ‘‘சுற்றாடல் முன்னோடி மாணவர் படையணி’’ நடவடிக்கைகளை ஊக்குவித்தல்.

10. **பௌதிக வள அபிவிருத்தி மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு**

- பாடசாலையின் பௌதிக வளங்களைப் பாதுகாத்தலும் மேம்படுத்தலும்.
- பாடசாலையின் பௌதிக வளங்களின் விருத்திக்காக மாணவர்களுக்கு இடையே உரையாடல்களைக் கட்டியெழுப்புதல்.
- பாடசாலையின் பௌதிக வளங்களைப் பாதுகாப்பதற்காக பாடசாலை மாணவர், ஆசிரியர், பெற்றோர் அமைப்புக்களைக் கட்டியெழுப்புதல்.
- எஸ் 5 (ஞ5) முறையைப் பாடசாலையில் செயற்படுத்துதல்.
- பாடசாலைத் தோட்டம், மண்டபம், கட்டடங்கள், பாடசாலையின் பல்வேறு செயல்கள் நிகழும் இடங்களை குறியீடுகள் மூலமாக ஏனையோர் இனங்காணத்தக்கவாறு அவற்றுக்கு அடையாளமிடல்.
- பாடசாலைச் சூழலை ஒழுங்காக அமைத்தலும் பெயரிடலும்.
- பாடசாலை இழிவளவான வளங்களைக் கொண்டு உச்ச பயன் பெறுவற்குத் தேவையான திட்டங்கள் தயாரித்தலும் செயற்படுத்தலும்.
- பிரதேசத்திலுள்ள பயன்படுத்தத்தக்க வளங்களை இனங்காண்பதற்கும் அவற்றைப் பயனுறுதியுள்ளவாறு பயன்படுத்துவதற்குமான வேலைத்திட்டங்களை நடைமுறைப் படுத்துதல்.
- விபத்துக்களின்போது உதவி ஒத்தாசை வழங்குபவர்களுக்காக தலைமைத்துவ தன்னார்வத் தொண்டர் குழு அணியைக் கட்டியெழுப்புதல்.
- அனர்த்த முகாமைத்துவச் சந்தர்ப்பங்களை எதிர்கொள்வதற்கு ஏற்ற சூழலைப் பாடசாலையில் கட்டியெழுப்புதல்.

➢ பாடசாலை அனர்த்தப் பாதுகாப்புத் திட்டத்தைத் தயாரித்தல், அறிவூட்டம் செய்தல் மற்றும் பயிற்சியளித்தல் அவற்றை நடைமுறைப்படுத்தல்.

| |
|---|
| மாணவர் பாராளுமன்றத்தின் அனைத்து நடவடிக்கைகளின் ஊடாக இறுதியில் நிலைபேறான சமாதானம் மற்றும் நிலைபேறான அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கு அவசியமான திறன்களைக் கொண்டதாக மாணவ மாணவியரை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். |

## உப அட்டவணை2

**<u>பாடசாலை மாணவர் பாராளுமன்றப் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்படுவற்காக மாணவ வேட்பாளர் தாக்கல் செய்யும் வேட்புமனுப் பத்திரம்.</u>**

1. **வேட்பாளரின் தனிப்பட்ட தகவல்கள்**

i. வேட்பாளரின் முழுப்பெயர் :-
ii. வேட்பாளரின் பெயர் முதலெழுத்துக்களுடன் :-
iii. தனிப்பட்ட முகவரி :-
iv. பிறந்த திகதி :-
v. 20… ∴ … ∴ … அன்று உள்ளவாறு வயது :-……..வருடம் ……..மாதம்……..நாள்

2. **மாணவர் பாராளுமன்ற பிரதிநிதியாக வேட்புமனு தாக்கல் செய்யும் வேட்பாளர் தற்போது பாடசாலையில் வகிக்கும் பதவிகள்.**

i. பிரதான மாணவர் தலைவர் ைை. விளையாட்டுத் தலைவர்
ii. உப பிரதான மாணவர் தலைவர் எ. வகுப்பு மாணவர் தலைவர்
iii. மாணவர் தலைவர் எை. பிற ………

3. **பாட இணைச் செயற்பாடுகள்**

பாடசாலை மாணவர் சங்கங்கள், கழகங்களில் தற்போது வகிக்கும் பதவிகள்.

| | பாடம் சார்ந்த ∴ பாட இணை | வகித்த பதவி ∴உறுப்பினர் | ஆண்டு |
|---|---|---|---|
| i. | ………………… | ………………… | ………………… |
| ii. | ………………… | ………………… | ………………… |
| iii. | ………………… | ………………… | ………………… |

4. **பாட இணைச் செயற்பாடுகள் மூலம் பெற்ற பாராட்டுக்கள், விருதுகள் தொடர்பான தகவல்கள்.**

| | பிரிவு | நிலை ∴திறமை | ஆண்டு |
|---|---|---|---|
| i. | ………………… | ………………… | ………………… |
| ii. | ………………… | ………………… | ………………… |
| iii. | ………………… | ………………… | ………………… |

5. **பாடசாலையில் நடைமுறைப்படுத்தியுள்ள ஏனைய செயற்றிட்டங்களுக்காகச் செய்த பங்களிப்பு**

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

**6. பாடசாலைக்கு வெளியே சமூகத்தில் வெவ்வேறு அமைப்புக்களில் வகிக்கும் பதவிகள்**

| அமைப்பு | பதவி |
|---|---|
| | |
| | |
| | |
| | |

7. **பாடசாலையிலும் வெளியே சமூகத்திலும் விளையாட்டுச் செயற்பாடுகளில் பெற்ற வெற்றிகள்.**

| பாடசாலையில் ∴ பாடசாலைகளுக்கு இடையில் | பாடசாலைக்கு வெளியே சமூகத்தில் |
|---|---|
| | |
| | |
| | |
| | |

மேற்படி தகவல்கள் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் உறுதியளிக்கின்றேன். இத்தகவல்கள் தவறானவை என்பது உறுதியாகுமாயின், …………………………………… ஆகிய நான் மாணவர் பாராளுமன்றப் பிரதிநிதியாக தெரிவுசெய்யப்படுவதற்கோ அப்பதவியை வகிப்பதற்கோ பொருத்தமற்றவராவேன் என்பதை ஏற்றுக்கொள்கிறேன்.

வேட்பாளர் பெயர் :- ……………………………………….

திகதி :- ……………… வேட்பாளர் கையொப்பம் ……………………

**வகுப்புப் பொறுப்பாசிரியரின் விதந்துரைப்பு**

……………………………………………………………… வித்தியாலயத்தில் ……….**.ஆந்** தரத்தில் கல்வி பயிலும் ……………………………………………………………. எனும்

பெயரைக் கொண்ட மாணவ வேட்பாளர் முன்வைத்துள்ள தகவல்கள் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

………………………………… …………………………………

வகுப்புப் பொறுப்பாசிரியரின் பெயர் வகுப்புப் பொறுப்பாசிரியரின் கையொப்பம்

**பிரிவுத் தலைமை ∴ தரத் தலைமை ஆசிரியரின் விதந்துரைப்பு**

விதந்துரைக்கின்றேன் ∴ விதந்துரைக்கவில்லை.

………………………………… ………………………………

ஆசிரியரின் பெயர் ஆசிரியரின் கையொப்பம்

(பிரிவுத் தலைமை ∴ தரத் தலைமை) (பிரிவுத்தலைமை ∴ தரத் தலைமை)

**அதிபரின் அனுமதி**

மேற்படி மாணவ வேட்பாளரை, இப்பதவிக்காகத் தெரிவுசெய்வதை அனுமதிக்கிறேன் ∴ அனுமதிக்கவில்லை.

…………………………………… ……………………………………

அதிபர் பெயர் அதிபரின் கையொப்பம்

……………………………. திகதி பதவி முத்திரை

**பாடசாலை மாணவர் பாராளுமன்ற அமைச்சராக ∴ பிரதி அமைச்சராக தெரிவு செய்யப்படுவதற்காக மாணவர் பிரதிநிதி முன்வைக்கும் விண்ணப்பப் பத்திரம்.**

1. **வேட்பாளரின் தனிப்பட்ட தகவல்கள்**

   1. வேட்பாளரின் முழுப்பெயர் :-
   2. வேட்பாளரின் பெயர் முதலெழுத்துக்களுடன் :-
   3. தனிப்பட்ட முகவரி :-
   4. பிறந்த திகதி :-
   5. 20… ∴ … ∴ … அன்று உள்ளவாறு வயது :- ……..வருடம்……..மாதம் ……..நாள்

2. மாணவர் பாராளுமன்ற அமைச்சராக ∴ பிரதி அமைச்சராக வேட்புமனு தாக்கல் செய்யும் வேட்பாளர் தற்போது பாடசாலையில் வகிக்கும் பதவிகள்.

   01. பிரதான மாணவர் தலைவர்
   02. உப பிரதான மாணவர் தலைவர்
   03. மாணவர் தலைவர்
   04. விளையாட்டுத் தலைவர்
   05. வகுப்பு மாணவர் தலைவர்
   06. பிற ……………

3. **பாட இணைச் செயற்பாடுகள்**

பாடசாலை மாணவர் சங்கங்கள், கழகங்களில் தற்போது வகிக்கும் பதவிகள்.

| பாடம் சார்ந்த.:. பாட இணை | வகித்த பதவி | ஆண்டு |
|---|---|---|
| ………………… | …………………… | ………………… |
| ………………… | …………………… | ………………… |
| ………………… | …………………… | ………………… |

4. **பாட இணைச் செயற்பாடுகள் மூலம் பெற்ற பாராட்டுக்கள், விருதுகள் தொடர்பான தகவல்கள்.**

| பிரிவு | நிலை.:. திறமை | ஆண்டு |
|---|---|---|
| …………………… | …………………… | …………………… |
| ………………… | ……………..……… | ……….…………… |
| …………………… | ……………..……… | ……….…………… |

5. பாடசாலையில் நடைமுறைப்படுத்தியுள்ள ஏனைய செயற்றிட்டங்களுக்காகச் செய்த பங்களிப்பு.

………………………………………………………………………………………….

…………………………………………………………………………………………..

………………………………………………………………………………………….

6. பாடசாலைக்கு வெளியே சமூகத்தில் வெவ்வேறு அமைப்புக்களில் வகிக்கும் பதவிகள்.

| **அமைப்பு** | **பதவி** |
|---|---|
| | |
| | |
| | |
| | |

**7.** பாடசாலையிலும் சமூகத்திலும் விளையாட்டுச் செயற்பாடுகளில் பெற்ற வெற்றிகள்

| **பாடசாலையில் .:. பாடசாலைகளுக்கு இடையில்** | **பாடசாலைக்கு வெளியே** |
|---|---|

| | |
|---|---|
| | |
| | |
| | |
| | |

மேற்படி தகவல்கள் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் உறுதியளிக்கின்றேன். இத்தகவல்கள் தவறானவை என்பது உறுதியாகுமாயின், …………………………………… ஆகிய நான் மாணவர் பாராளுமன்ற அமைச்சராக ∴ பிரதி அமைச்சராக தெரிவுசெய்யப்படுவதற்கோ அப்பதவியை வகிப்பதற்கோ பொருத்தமற்றவராவேன் என்பதை ஏற்றுக்கொள்கிறேன்.

வேட்பாளர் பெயர் :- ……………………………………….

திகதி :- ……………… வேட்பாளர் கையொப்பம் ……………………

**பிரிவுத் தலைமை ∴ தரத் தலைமை ஆசிரியரின் விதந்துரைப்பு**

மேற்படி மாணவ அபேட்சகர் இப் பதவிக்காக தெரிவு செய்வதற்கு பொருத்தமானவர் என விதந்துரைக்கின்றேன் ∴ விதந்துரைக்கவில்லை.

………………………………… ……………………………………

ஆசிரியரின் பெயர் ஆசிரியரின் கையொப்பம்

(பிரிவுத் தலைமை ∴ தரத் தலைமை) (பிரிவுத் தலைமை ∴ தரத் தலைமை)

**அதிபரின் அனுமதி**

மேற்படி மாணவ பிரதிநிதியை, இப்பதவிக்காகத் தெரிவுசெய்வதை அனுமதிக்கிறேன் ∴ அனுமதிக்கவில்லை.

…………………………………… ………………………………………

அதிபர் பெயர் அதிபரின் கையொப்பம்

……………………………. திகதி பதவி முத்திரை

பாடசாலை மாணவர் பாராளுமன்ற பிரதிநிதியாக தெரிவு செய்யப்படுவதநற்கு அபேட்சகராக சமர்ப்பிக்கும் வேட்புமனு பத்திரம் மற்றும் பாடசாலை மாணவர் பாராளுமன்றத்தின்

அமைச்சராக ∴ பிரதி அமைச்சராக தெரிவு செய்யப்படுவதற்காக மாணவ பிரதிநிதி சமர்ப்பிக்கும் விண்ணப்பப் படிவத்தினை பாடசாலைக்கு அவசியமான வகையில் மாற்றம் செய்து கொள்ள முடியும். விசேடமாக மாணவர் அமைச்சிற்கு தெரிவு செய்யப்படுவதற்கான விண்ணப்பப் படிவத்திற்கு 2008∴15 சுற்றுநிருபத்தினையும் ஆராய்ந்து மாற்றஞ் செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கவும்.

## உப அட்டவணை 3

**மாணவர் பாராளுமன்றத்தின் பிரதான பதவிகளுக்குரிய கடமைப் பொறுப்புக்கள்**

**செயலாளர் நாயகம்**

- இந்த அறிவுறுத்தல் கோவையில் ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ள கடமைப் பொறுப்புக்களுக்கு மேலதிகமாகப், பின்வரும் கடமைப் பொறுப்புக்களும் செயலாளர் நாயகத்தைச் சாரும்.
- மாணவர் பாராளுமன்றத்தைத் தாபித்தல் மற்றும் நடத்திச் செல்லல் தொடர்பான சகல கருமங்கள். (பிரதிச் செயலாளர் நாயகர்களை நியமித்தல், வேட்புமனுக் கோரல், வாக்கெடுப்பு நடத்துதல், பிரதிநிதிகளைத் தெரிவுசெய்தல், பிரதான பதவிகளுக்காக மாணவர் பிரதிநிதிகளை நியமித்தல், மாணவர் பாராளுமன்றத்துக்கான பயிற்சிக் கருத்தரங்குகள் நடத்துதல்.)
- மாணவர் பிரதிநிதிகளுக்காக திறன்விருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்துதல்.
- மாணவர் பாராளுமன்றத்தில் ஒழுக்கத்தை நிலைநிறுத்துதல்.
- மாணவர் பாராளுமன்றங்களிலிருந்து முன்வைக்கப்படும் பிரேரணைகளை நடைமுறைப்படுத்துதலும் அதற்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குதலும்.

**பிரதிச் செயலாளர் நாயகம் (அபிவிருத்தி)**

- மாணவர் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் கருமங்களில் உதவுதல்.
- மாணவர் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும் பிரேரணைகளை முறைமையாகத் தயார்ப்படுத்தி முன்வைத்தல், நிறைவேற்றப்படும் பிரேரணைகளை நடை முறைப்படுத்துவற்கு ஆவன செய்தலும் ஒருங்கிணைப்பு செய்தலும்.

**பிரதிச் செயலாளர் நாயகம் (நிருவாகம்)**

- மாணவர் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் கருமங்களுக்கு உதவுதல்.
- மாணவர் பாராளுமன்றக் கருமங்கள் சார்பாக சபை முதல்வருக்கு ஆலோசனை வழங்குதல்.

**பிரதிச் செயலாளர் நாயகம் (ஒழுக்கம்)**

- மாணவர் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் கருமங்களில் உதவுதல்.
- மாணவர் பாராளுமன்ற ஒழுக்க நடவடிக்கைகளைப் பேணிவரப் பங்களிப்புச் செய்தல்.

**சபாநாயகர்**

- மாணவர் பாராளுமன்றத்துக்குத் தலைமை தாங்குதல்.
- செயலாளர் நாயகத்தின் ஆலோசனைகளின்படி மாணவர் பாராளுமன்றத்தை நடத்திச் செல்லல்.
- சட்டங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக வாக்கெடுப்பு நடத்துதல்.

**பிரதமர்**

- மாணவர் பாராளுமன்ற அமைச்சுக்களை ஒருங்கிணைப்பு செய்தல்.
- மாணவர் அமைச்சரவைக் கூட்டங்களைக் கூட்டுதலும் தலைமை வகித்தலும்.
- மாணவர் பாராளுமன்ற நிதிசார் நடவடிக்கைகளைப் பேணிவருதல் மற்றும் வகைப்படுத்துதல்.

**சபை முதல்வர்**

- சபையில் நிறைவெண்ணைப் (ஞரழசரஅ) பேணுதல்.
- கூட்டங்களில் மாணவர் பிரதிநிதிகளைப் பங்குகொள்ளச் செய்தல்.
- உரிய நேரத்தில் மாணவர் பாராளுமன்றத்தைக் கூட்டுதல்.
- மாணவர் பாராளுமன்ற பேச்சாளர் பட்டியலைத் தயாரித்தல்.
- மாணவர் பாராளுமன்றத்தை நடத்திச் செல்வதற்காக செயலாளர் நாயகத்துக்கும் பிரதிச் செயலாளர் நாயகர்களுக்கும் உதவுதல்.
- செயலாளர் நாயகத்தினது ஆலோசனைப்படி சபை நீடிப்புப் பிரேரணைகளை முன்வைத்தல்.

**பிரதிச் சபாநாயகர்**

- சபாநாயகர் இல்லாதபோது மாணவர் பாராளுமன்றத்துக்குத் தலைமை தாங்குதல்.

**பிரதிச் செயற்குழுத் தலைவர்**

- சபாநாயகர், பிரதிச் சபாநாயகர் ஆகிய இருவரும் இல்லாத சந்தர்ப்பத்தில் மாணவர் பாராளுமன்றத்துக்குத் தலைமை தாங்குதல்.

**ஆலோசனைச் செயற்குழுக்கள்**

- அந்தந்த அமைச்சுக்குரிய கருமங்களைத் திட்டமிடுதல், நடைமுறைப்படுத்துதல், கண்காணித்தல் மற்றும் குறித்த அமைச்சு தொடர்பான நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

- நிகழ்ச்சித் திட்ட கண்காணிப்பு இணைப்பாக்க மாணவர்கள் தொடர்பான அறிக்கைகளையும் நிதிசார் நடவடிக்கைகளையும் முறைமையாகப் பேணிவருதல்.

## உப அட்டவணை - 04

**அமைச்சுக்கள் சார்ந்த வேலைத்திட்டத்தின் கட்டமைப்பு**

1. வேலைத்திட்டத்தில் உள்ளடங்கும் ஆசிரியர்கள்.
2. விடயத்துக்குப் பொறுப்பான, மாணவ அமைச்சர் ∴ மாணவ பிரதிநிதி அமைச்சர்
3. அமைச்சின் ஆலோசனைச் செயற்குழுவில் அடங்கும் மாணவர் பிரதிநிதிகள்.
4. வேலைத்திட்டத்தின் ஒருங்கிணைப்பு பிரதிநிதிகள்.
5. ஏனைய மாணவர் பிரதிநிதிகள். (அட்டவணை இல. 02இன் படி)

**பாடசாலை மாணவர் பாராளுமன்ற அங்குரார்ப்பண அமர்வில் வாசிப்பதற்குரிய கல்வி அமைச்சுச் செயலாளரின் பிரகடனம்**

பாடசாலை மாணவ, மாணவியருக்கு சனநாயகம் தொடர்பான நடைமுறை அனுபவங்களைப் பெற வாய்ப்பளித்து, சட்டத்தின் ஆதிபத்தியம் மற்றும் வாக்களிப்பதன் முக்கியத்துவத்தையும் உரையாடல்கள், இணக்கப்பாடுகள், ஏனையோரின் கருத்துக்களைச் செவிமடுத்தல் மற்றும் மதித்தல் தொடர்பாகவும் மனப்பாங்கு விருத்திக்குச் சந்தர்ப்பங்களை விரிவுபடுத்தி எதிர்கால பிரஜைகளாக பாடசாலை மாணவர்க்கு அவர்களது சமூகத்தில் அனுபவிக்கும், எதிர்கொள்ளும் சமூக பொருளாதார மற்றும் பண்பாட்டு பிரச்சினைகள் தொடர்பாக வெளிப்படையாக உரையாடியும் கலந்துரையாடியும் அவர்களது அறிவை விரிவாக்கியவாறு தாம் அனுபவிக்கும் அல்லது எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை பிரேரித்து உரையாடல் மூலம் இணக்கப்பாடுகளை எட்டி, தமது சக்திக்குட்பட்ட வகையில் நாட்டுக்கு சேவை செய்யத்தக்க சந்தர்ப்பங்களை விரிவுபடுத்தி பரந்துபட்ட தேசிய குறிக்கோள்களை இலக்காகக் கொண்டு, இலங்கைப் பாடசாலை முறைமையில் தாபிக்கப்படும் பாடசாலை மாணவர் பாராளுமன்ற வேலைத்திட்டத்தின் கீழ் …………………………………………………………………….. வித்தியாலய மாணவர் பாராளுமன்ற அங்குரார்ப்பண அமர்வு ………………………ஆம் ஆண்டு …………………… மாதம் ………………ஆந் திகதி ஆரம்பமாகியது என்பதை அறிவிக்கின்றேன்.